# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 6
செய்தி 10
மார்ச் 2021
விலை ரூ 10/-

# ஆட்சி மாற்றம் நிகழட்டும்!
# தமிழகம் தலை நிமிரட்டும்!!

பொதுத்துறைகளை
தனியாருக்கு தாரைவார்த்து
கொள்ளையடிக்கும் விஷ
பாம்புகளை விரட்டியடிப்போம்...






## மாநிலம் முழுவதும் கேங்மேன் பயிற்சி வகுப்பு நடத்தி
## 10 ஆயிரம் கேங்மேன்கள் பணி நியமனத்திற்காக தடைகளை தளர்த்தி
## பணி நியமனம் பெற்று பணியேற்புக்கு வழிகாட்டிய
## சிஐடியு-வில் தங்களை இணைத்துக் கொண்ட கேங்மேன் ஊழியர்கள்



# மின்கதிர்
## செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

விலை ரூ. 10/-
மார்ச் 2021


**உள்ளே....**


- ★ மாற்றத்தை நோக்கி பயணம்...
- ★ என் வாக்கு எனது உரிமை
- ★ பட்ஜெட் ஒரு பார்வை
- ★ தேர்தல் வருது தேர்தல் வருது - ஜாக்கிரதை
- ★ கேங்மேன் வழக்கும் மத்திய அமைப்பின் நடவடிக்கையும்...
- ★ வஞ்சிக்கப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள்...
- ★ மின்துறை அமைச்சரிடம் ஊதிய உயர்வு கோரிக்கை பட்டியல் அளிப்பு...
- ★ சதிகளை சாய்த்து சாதனை படைக்கும் ஆந்தோலன் ஜீவிகள்
- ★ மத்திய அமைப்பின் செயற்குழு முடிவுகள்
- ★ கடன் வலையில் தமிழக மின்வாரியம்



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**



**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மகுதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# மாற்றத்தை நோக்கி பயணிப்போம்...

தமிழக மின்சார வாரியம் மிகப்பெரிய கடன் நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. தமிழக அரசின் பட்ஜெட்டைப் போலவே மின்வாரியத்தில் கடன் சுமையும் அதிகரித்து வருகிறது. மின்வாரியத்தின் உற்பத்தி நிலையங்களை முழுவீச்சில் இயக்கி மின் உற்பத்தி செய்யாமல் நீண்டகால கொள்முதல் மூலம் தனியாரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவதன் மூலமே, அதற்கு செலவழிக்கும் தொகையினால் நிதிவருவாயில் பற்றாக்குறை ஏற்பட்டு, கடன் நெருக்கடியில் வீழ்கிறது தமிழக மின்சார வாரியம்.

52,000-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்களை நிரப்பாமல் இருக்கின்ற பணியாளர்களின் தலையில் கூடுதல் வேலைபளுவை சுமத்தி வருகிறது. நீண்ட நெடிய போராட்டத்தின் விளைவாக 10,000 கேங்மேன் பணியாளர்களுக்கு விடிவு காலம்.

அதே நேரத்தில் விடுப்பட்டுபோன ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு ரூ.380/-ஐ தினக்கூலியாக வழங்கிட நமது தொடர்ச்சியான போராட்டத்திற்கு தீர்வு காணும் நம்பிக்கை ஏற்படுகின்ற நேரத்தில், தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டு நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்து விட்டது.

தமிழக அரசும் பணி ஓய்வு பெறுகின்றவர்களுக்கு ஓய்வுகால பணப்பயன்களை வழங்க முடியாமல் சென்ற ஆண்டு பணி ஓய்வு பெறும் வயதை 58-ல் இருந்து 59 ஆக்கி தற்போது இந்த ஆண்டு 59-ல் இருந்து 60 வயது ஆக்கி விட்டார்கள். படித்த வேலை இல்லாத இளைஞர்களின் கனவுகளை சிதைத்து விட்டார்கள்.

தமிழக அரசு தாக்கல் செய்த பட்ஜெட்டிலும் மிகப்பெரிய கடன் சுமை தமிழகத்திற்கு உள்ளது என வெட்ட வெளிச்சமாகி விட்டது. தேர்தல் கால பட்ஜெட்டாக இது அமைந்துள்ளது.

மத்திய மாநில அரசுகள் தாக்கல் செய்த இந்த பட்ஜெட்டுகளில், சாமான்ய மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் காலத்தில் உயர்த்தப்படுகின்ற பெட்ரோல், கேஸ், ஆகியவை தற்போது அனுதினமும் விலைகள் உயர்ந்து, நடுத்தர வர்க்கத்தையும், பாமரனையும் தெருவுக்கே கொண்டு வந்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தை ஆண்ட அதிமுக அரசு மின்துறை, அரசு போக்குவரத்து, குடிநீர், போன்ற கேந்திரமான துறைகளை நிதி நெருக்கடிக்கு உள்ளாக்கியது தான் இவர்களது அளப்பரிய சாதனையாக உள்ளது.

கொரானா காலத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய நஷ்ட ஈடுகூட வழங்க இயலாத அரசாக இருந்தது.

தமிழகம் முன்னேறிட உழைப்பாளி மக்களின் கனவு களும்,எண்ணங்களும் பூர்த்தியாகிட, நமது எதிர்காலம் செழிப்பாகிட, நமது சந்ததிகள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும், சுகாதாரத்திலும், உரிமைகள் பெற்றிட, தொழிலாளர் உரிமைகளை பாதுகாத்திட தமிழகத்தில் ஜனநாயகம் தழைத்தோங்கிட 2021 ஏப்ரல் 6-ல் தமிழக சட்டமன்றத்திற்கு நடைபெற உள்ள தேர்தலில் இடதுசாரிகளின் ஆதரவு பெற்ற வேட்பாளர்களை தேர்ந்தெடுப்போம்.

என **சூளுரைப்போம்!**



# என் வாக்கு எனது உரிமை

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 6-ல் வாக்குபதிவு நாளாகும். மே 2-ல் தமிழகத்தை அடுத்து ஐந்து ஆண்டுகளுக்கு யார் ஆளப்போகிறார்கள் என்ற விபரம் தெரியவரும்.

ஆனால் நமது தொழிலாளர் வர்க்கம் யாருக்கு வாக்களிக்க போகிறது? என்ற கேள்வியை நாம் முன் வைக்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளாக தமிழகத்தை ஆண்ட அதிமுக அரசு அனைத்து துறைகளிலும் தோல்வியை சந்தித்துள்ளது. தமிழகத்தில் இலவசங்களை வாரி வழங்கி ஒவ்வொருவரின் தலையிலும் ரூ.79,083 கடனை சுமத்தி வைத்துள்ளது.

கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவம், சுகாதாரம் என அனைத்திலும் தோல்வியை சந்தித்துள்ளது. கொரானா காலத்தில் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து நின்ற பொழுது இரண்டு மூன்று மாத காலத்திற்கு பொருட்களை இலவசமாக வழங்கி, அதன் பின் கைகழுவி விட்டது. முறைச்சாரா தொழிலாளிகளும் எண்ணற்ற சோகங்களை சந்தித்தனர்.

அரசின் பொதுத்துறைகளை தனியார் மயப்படுத்த போட்டிபோட்டு கூவி கூவி விற்கும் நிலை கடந்த 8 ஆண்டுகளில் ஒரு பொதுத்துறையை கூட உருவாக்காத மத்திய அரசும், மாநிலத்தில் 10 ஆண்டுகள் இருந்து அதிமுக அரசும் ஆட்சியில் உள்ளது வெட்க கேடு.

மத்திய பிஜேபி அரசின் வருமான வரி ரெய்டுக்கு பயந்து தமிழகத்தில் ஆட்சி நடத்தியது அ.தி.மு.க அரசு.

மின்சார ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு, போக்குவரத்து தொழிலாளர்களுக்கு 01.07.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள். சத்துணவு ஊழியர்கள், குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்கள், டாஸ்மார்க் ஊழியர்கள் ஆகியோரின் கோரிக்கைகளை நிறைவேற்றாத அரசாக இருந்தது.

நீர் நிலைகளை பாதுகாக்க முடியவில்லை. விவசாயிகளுக்கு முழுமையான இலவச மின்சாரம் கிடைக்கவில்லை. மின்வாரியம் கடும் நிதி நெருக்கடி, போக்குவரத்து துறையிலும் நிதி நெருக்கடி, அரசு துறைகளில் ஓய்வு பெற்றவர்களுக்கு சமூக பாதுகாப்பான பென்சன் உள்ளிட்ட ஓய்வுகால சலுகை வழங்கப்படவில்லை.

100 நாள் வேலை திட்டத்தை உயர்த்த முடியவில்லை! ஒரு புறம் குடிநீர் பஞ்சம், மறுபுறம் ஆறுகளையும் நதிகளையும் சூறையாடிய விளைவு மழைக் காலங்களில் பெய்யும் மழை நீரினால் வெள்ளம் வீணாகி கடலில் கலக்கும் அவலம்.

டாஸ்மார்க் மூலம் மட்டுமே நிதியாதாரத்தை திரட்ட, சாமான்ய பாமர மக்களின் குடும்பத்தை நடுவீதியில் நிற்க வைத்ததே மிகப்பெரிய சாதனை


ஆனால் இந்த 10 ஆண்டுகளில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என சொத்து சேர்த்தது மிகப்பெரிய அளவு. அதற்கு உதாரணம் மறைந்த வேளாண்மை துறை அமைச்சர் துரைக்கண்ணு இவர் மறைந்த பின்பு தஞ்சாவூரிலும், ஹைதராபாத்திலும் போலீஸ் காவலுடன் நடந்த சோதனை. தற்போது கூட இந்த தேர்தலில் வெற்றிபெற ஓட்டுக்கு துட்டு பார்முலாவை நிறைவேற்ற பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாக பத்திரிக்கை செய்தி.

என் வாக்கை நான் யாருக்கு செலுத்த வேண்டும், என வோட்டிங் மிஷின் பட்டனை அழுத்தும் முன் யோசிக்க வேண்டும். இது நமது தேவைகளை அடுத்த ஐந்து ஆண்டுகளில் பூர்த்தி செய்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருக்க வேண்டும்.

ஆகவே, **தேர்வு செய்வோம் இடதுசாரிகளின் ஆதரவு பெற்ற வேட்பாளர்களை.**

# பட்ஜெட்

## ஒரு பார்வை




அதிமுக அரசின் 10 ஆண்டுகால சாதனையில்! 5.7 லட்சம் கோடி கடன் அதிகரித்தது தான் ஆகப்பெரும் சாதனை! தமிழக அரசின் கஜானாவை ஒட்டு மொத்தமாக காலி செய்திருக்கிறது. தமிழக அரசின் கஜானாவை ஒட்டு மொத்தமாக காலி செய்திருக்கிறது. தொழில் உற்பத்தி வருவாய் சரிவு, வரி வருவாய் சரிவு, மத்திய அரசு தர வேண்டிய நிதி வருவாய் சரிவு என தமிழகத்தின் வளர்ச்சியை சரிக்கப்பட்டு விட்டது.

தமிழக முதல்வரின் கட்டுப்பாட்டிலுள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு மட்டும் ரூ. 18,750/- கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் நெடுஞ்சாலைத் துறைக்கு மட்டும் இவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டிருப்பது ஆட்சியாளர்கள் சம்பாதிப்பதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய ஜி.எஸ்.டி. நிலுவை போன்ற வரி பாக்கிகள் கேட்டுப்பெறுவதில் கையாலாகாத அரசாக இருந்தது.

மத்திய அரசின் மொத்த வரி வருமானத்தில் கடந்த 9 ஆண்டுகள் செஸ், மற்றும் சர்சார்ஜ் பங்கு 10 சதவீதத்திலிருந்து 20 சதமாக அதிகரித்துள்ளது.

மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய பங்கு ரூ. 28,493.4 கோடியாக திட்ட மிடபட்டிருந்தது ஆனால் தற்போது 23,039.46 கோடியாக குறைந்துள்ளது. மத்திய அரசின் பங்களிப்பை வற்புறுத்தி பெற தமிழக அரசு தவறி உள்ளது.

சுகாதாரம், கல்வி, வேளாண்மை மற்றும் ஊரக உட்கட்டமைப்பு உள்ளிட்ட அத்யாவசிய துறைகளுக்கு 15வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ள ரூ. 4845/ கோடியை மத்திய அரசு விடுவிக்க மறுத்து வருகிறது. திராணியற்ற தமிழக அரசு தமிழக மக்கள் நலனை காவு வாங்கும் அரசாக இருந்து வந்தது. ஒட்டு மொத்த தமிழகத்தின் பொருளாதாரம் அதாள பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளது.

### அதிமுக ஆட்சியின் 10 ஆண்டு கால சாதனை பட்ஜெட்

| ஆண்டு | கடன் சுமை |
|---|---|
| 2011-2012 | 1,02,439 கோடி |
| 2012-2013 | 1,20,204 கேடி |
| 2013-2014 | 1,40,041 கோடி |
| 2014-2015 | 1,95,290 கோடி |
| 2015-2016 | 2,11,483 கோடி |
| 2016-2017 | 2,52,431 கோடி |
| 2017-2018 | 3,14,366 கோடி |
| 2018-2019 | 3,55,484 கோடி |
| 2019-2020 | 3,97,495 கோடி |
| 2020-2021 | 4,85,502 கோடி |

கடன்சுமை ஏற ஏற
மக்களின் வாழ்வாதாரமும் பறிபோனதே!
இது தேர்தல் கால பட்ஜெட்! வெற்றி நடை போடும் பட்ஜெட் அல்ல! மக்களின் தலையில் சுமையேற்றிய பட்ஜெட்! பாடம் புகுட்டுவோம்!

மாநில அரசின் ஒட்டு மொத்த வருவாய் பற்றாக்குறை ரூ.65,994 கோடியாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் 24.98 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதாவது மார்ச் 31-ல் ரூ. 4,85,502 கோடியே 54 லட்சமாக தமிழகத்தின் மொத்த கடன் உள்ளது. தமிழகத்தின் மக்கள் தொகை 7.21 கோடி அதன்படி தனிநபர் ஒவ்வொருவரும் ரூ.79,083 கடனை சுமக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்புகளில் பெற்ற விவசாய கடன்களில் ரூ.12,100 கோடியை ரத்து செய்வதாக அறிவித்து விட்டு இடைக்கால பட்ஜெட்டில் கூட்டுறவு துறைக்கு வெறும் ரூ.5000 கோடி தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மீதி ரூ.7000 கோடிக்கு கூட்டுறவுத்துறை என்ன செய்யும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

மத்திய அரசின் பட்ஜெட்டிலும் மாநிலங் களை கண்டு கொள்வதில்லை. 100 நாள் வேலை திட்டத்திற்கு குறைந்த நிதியையே ஒதுக்கீடு செய்திருந்தது. 100 நாள் வேலை கிடைப்பது அரிதாக மாறி விட்டது. கிராமப்புற மக்கள் இந்த 100 நாள் வேலை திட்டத்தில், அரைவயிறு கஞ்சியாவது குடித்தவர்களின் வாயில் மண்ணை அல்லவா போட்டுவிட்டது இந்த மத்திய, மாநில அரசுகள்.

மின்சார வாரியத்திற்கு புதிய மின் உற்பத்தி திட்டங்களுக்கு உரிய நிதி ஒதுக்கப்படவில்லை. மரபுசார எரிசக்தி மூலம் உற்பத்தி செய்ய நிதி ஒதுக்காமல் தனியாரிடத்தில் மின்சாரத்தை அதிக விலைக்கு கொள்முதல் செய்யவே திட்ட மிட்டுள்ளது என்பதே நிதர்சன உண்மை.

# என்ன பாவம் செய்தார்களோ!

தினமும் இரயிலில் போய் வருபவர்களுக்கு தினமும் ஒரு அனுபவம் கிடைக்கப்பெறும். நேற்றும் அப்படித்தான் காலை உணவை பெரும்பாலும் பெண்கள் இரயிலில் தான் சாப்புடுவாங்க. வீட்டில் அரக்கபரக்க எல்லா வேலைகளையும் செய்து முடித்து கிளம்பும் போது சாப்பிட நேரம் இருக்காது. ஒரு டப்பாவில் போட்டு எடுத்துக்கொண்டு இரயிலில் சாப்பிடுவதே வழக்கமாகி போன ஒன்று.

இன்றும் அது போல் இரயிலில் ஏறிய பின்பு டிபன் பாக்ஸ் ஓபன் பண்ணி இட்லியை சாப்பிட நினைத்து எதிர்புறம் யதார்த்தமாய் பார்த்தேன். ஒரு இரண்டு வயது தான் இருக்கும் வெறும் மேல்சட்டைமட்டுமே போட்டு இருந்தது. கீழே பேண்டீஸ் கூட போடல அந்த குழந்தை. வெறும் உடம்புடன் அழகாக சிரித்தது. நம்ம வீட்டு குழந்தை ஞாபகம் வந்துவிட கண்ணில் கண்ணீருடன் அக்குழந்தையை பார்த்து "வா... சாப்பிடு", என்றேன். அது பாசி மாலைகளுடன் விளையாடிக் கொண்டே சிரித்தது.

பூரித்து போய்விட்டேன். அவன் சிரிப்பு என்னவோ செய்தது.

கண்ணத்தில் முத்தமிட்டு, இட்லி கொடுத்து சாப்பிட சொல்லி அவனது அம்மாவிடம் கொடுத்தேன். ஏம்மா பாப்பாக்கு ஜட்டி போடல? செப்பல் போடல குழந்தைக்கு infection ஆகிடப்போகுதுமா என்றேன். "அடபோக்கா... வியாபாரம் இல்லாம பச்ச தண்ணி வாங்கி குடிக்க காசு இல்லாம கஷ்டபடுறோம்க்கா. ஒரு நாள் ஒரு வேளை தான் சாப்பிடுவோம்"ன்னு சொன்னாங்க.

தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லையென்றால் இந்த உலகத்தையே அழித்திடுவோம்ன்னு சொன்ன நம்ம ஊரில் இப்ப பசி பஞ்சம் எல்லாம் சர்வசாதாரணமா ஆகிடுச்சி. இதே நாட்டில் தான் கோடி கோடியாய் கொள்ளை அடிச்சு வரி ஏய்ப்பு செய்து, பண மோசடி செய்து உல்லாசமாக வாழுறாங்க. பாவம் இந்த பர்பி, பாசிமணி விற்கும் மக்கள்.

ஓட்டு போட்டத தவிர இவங்க என்ன பாவம் செய்தாங்க? இவங்க வாழ்க்கை தரம் இன்னும் படுகுழிக்கு போயிருக்கிறது. இதையெல்லாம் கவனிக்க இவர்களுக்கு உதவ யாரும் வருவதில்லை. இப்படியே இவர்கள் எத்தனை நாள் வாழ முடியும்? தொடர்ந்து எப்படி இவங்க சமாளிப்பாங்க? ஒரே டென்ஷனா இருக்கு. நான் இறங்கும் இடம் வர மீண்டும் அந்த குழந்தை என்னை பார்த்து கை காட்டி டாடா சொன்னது.

பாப்பா உனக்கு என்னால் என்ன செய்து விட முடியும் இந்த இட்லியும் தண்ணியும் கொடுத்து உன் கண்ணத்தில் முத்தமிடுவதை தவிர, இயலாதவளாய் இறங்கி நடந்தேன்..



# தேர்தல் வருது! தேர்தல் வருது!! ஜாக்கிரதை

தமிழக சட்டமன்ற தேர்தல் மே மாதம் நடக்க இருக்கின்றது. அதற்கான தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு ஏப்ரல் 6 வாக்கு பதிவும், மே 2ல் வாக்கு எண்ணிக்கையும் நடக்கும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த தேர்தல் இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலைவிட சுவாரஸ்யமாக, விறுவிறுப்பாக இருக்கும் என்று அனைவராலும் கணிக்கப்படுகிறது. தமிழகத்தில் மும்முனை போட்டி என்று உறுதியான சூழலில் பலகட்சிகள் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி விட்டன. இந்த நிலையில் மக்கள் தங்களை யார் ஆள வேண்டும் என்பதற்கான தீர்ப்பை எழுதுகின்ற தேர்தல் ஏப்ரல் 6 அன்று நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தொழிலாளி வர்க்கம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை அறிந்து கடந்த 10 ஆண்டுகால அரசியல் நிலைமை களையும் கணக்கில் கொண்டு வாக்களிப்பது அவசியமாகின்றது.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தொழிலாளிகளுக்கு, மக்களுக்கு கிடைக்கும் துருப்புச்சீட்டு இது. தேர்தல் ஜனநாயத்தின் மூலம் அரசாங்கமே நமக்கு கொடுக்கும் ஒரு அற்புத வாய்ப்பு. இந்த வாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்துவதன் மூலம் அடுத்த ஐந்தாண்டு களுக்கு நமக்கான அரசாங்கத்தை தேர்வு செய்து கொள்ள முடியும். அதே போலவே 2021லும் நாம் புதிய அரசாங்கத்தை தேர்வு செய்ய வேண்டியுள்ளது என்பதை நமது தொழிலாளி வர்க்கம் உணர்ந்து, அறிந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

10 ஆண்டுகளை நிறைவு செய்ய உள்ள தமிழக அரசு மக்களுக்கு செய்த தொழிலாளி களுக்கு செய்த சாதக, பாதகங்களை சீர்தூக்கி வாக்களிக்க வேண்டிய கட்டாயம் வர்க்கப்பார்வை கொண்ட தொழிலாளிகளுக்கு உண்டு, விவசாயி களுக்கும் உண்டு. கடந்த பத்தாண்டுகளாக அதிமுக ஆட்சியில் உள்ளது. குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் தமிழக அரசினுடைய செயல் பாட்டில் மக்களுக்கு மிகப்பெரிய வருத்தமும், அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. முன்னாள் முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் இறந்த பிறகு அங்கு ஏற்பட்ட நாடகங்கள், திருப்பங்கள், போட்டிகள் அனைத்தும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, நடைபெற்ற நாடகத்தால் மக்கள் முகம் சுளித்தார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளில் மாநில அரசு மத்திய அரசின் கைப்பாவையாக செயல்பட்டது என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக மாறி விட்டது. துவக்கத்தில் எங்களது அரசு யாரையும் சார்ந்து இல்லை, சுயமாக செயல்படும் என்று சொன்னவர்கள் காலப்போக்கில் அவர்களின் செயல்பாடுகள் காரணமாக மக்கள் சொல்வது உண்மையென அவர்களாகவே நிரூபித்து விட்டார்கள். 50 ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பொழுது இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி ஆண்டது. அப்பொழுது பேரறிஞர் அண்ணா சொன்னது மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதை முழக்கமாகவே முன்வைத்தார். இதையே பின்பற்றியே இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும் பின்வரும் காலங்களில் முழக்கமாகவே இதை வைத்தனர். அவ்வாறு பாதுகாத்த இந்த கொள்கை முழக்கத்தை தமிழக அரசு தக்கவைத்துக் கொள்ளவில்லை என்ற வருத்தமும், ஆதங்கமும் தமிழக மக்களிடையே மிக அதிகமாகவே காணப்படுகிறது. மத்தியில்

ஆளும் பி.ஜே.பி. அரசு செய்யும் தவறான கொள்கை முடிவுகளைக்கூட விமர்சனம் செய் வதற்கு தமிழக அரசு தயாராக இல்லை. குறிப்பாக பணமதிப்பு இழப்பு, (Demonitisation) ஜி.எஸ்.டி யில் மாற்றங்கள் கொண்டு வந்தது புதிய வேளாண் சட்டங்கள், இயற்கை பேரிடர் காலங்களில் தமிழகத்திற்கான நிதி ஒக்கீடு, மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை என்று இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இவற்றிற்கெல்லாம் எதிர்வினையாற்றாமல் மத்திய அரசுக்கு கடிதம் எழுதி உள்ளோம் என்று மழுப்பலான பதிலை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழகத்தில் மக்களின் குடியைக் கெடுக்கும் சாராயக்கடைகளை மூடவேண்டு மென்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவிலில் சுதந்திர போராட்ட வீரர் சசிபெருமாள் துவங்கிய மதுக்கடைகளை மூடவேண்டும் என்ற போராட்டம் மதுரையில் சட்டக்கல்லூரி மாணவி நந்தினி துவக்கிய மதுக்கடைகளுக்கு எதிரான போராட்டம் தமிழகம் முழுவதும் வீச்சாக, எழுச்சியாக பரவியது. ஜனநாயக மாதர்சங்கம் முதல் அனைத்து அரசியல் கட்சிகளும் போராட்டத்தை ஆதரித்ததோடு களத்தில் இறங்கி போராடின. பெண்கள் கூட்டம் கூட்டமாக சாராயக் கடைகளை அடித்து நொறுக்கினார்கள். போராட்டத் தின் வீச்சைக்கண்ட சென்னை உயர்நீதி மன்றம் வழக்கை தானாக முன்வந்து எடுத்தது. வழக்கறிஞர் பாலுவும் இந்த வழக்கில் இணைந்திருந்தார். வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம் தமிழக அரசுக்கு நோட்டீஸ் அளித்தது. வழக்கின் இறுதியாக அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று கை விரித்தது. பிறகு இந்த வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்றது. உச்சநீதி மன்றத்தின் இறுதிதீர்ப்பாக நெடுஞ்சாலைகளில் சாராயக்கடைகள் இருக்கக் கூடாது என்ற உத்தரவை வழங்கியது. இந்த உத்தரவை தமிழக அரசு அமல்படுத்திய விதம் என்பது வீட்டின் வாசலை திசைமாற்றி வைத்துவிட்டு, நெடுஞ்சாலையில் இல்லை என்று சொன்ன இந்த நிகழ்வானது தமிழக மக்கள் எள்ளி நகையாடினர்.

தமிழக மக்களில் பெரும்பான்மையான முறைசாரா தொழிலாளர்கள் 93 சதவீதமானோர் உள்ளனர். அவர்கள் உடல் உழைப்பு தொழி லாளியாக உள்ளனர். நிச்சயமற்ற வருமானத்தை நம்பி வாழும் அவர்கள், கிடைக்கும் சொற்ப பணத் தை குடும்பத்திற்கு அளிக்காமல் சாராயக்கடையில் கொடுத்து தமிழ்குடும்பங்கள் சீரழிவதை தடுத்து நிறுத்துவதற்கு பதிலாக தமிழக அரசு உச்சநீதி மன்றம் வரை சென்று வாதாடியதை தமிழ்நாட்டு பெண்கள், சாமான்ய மக்கள் மறந்து விடவில்லை. அவர்கள் இன்னும் நெருப்பாய் கனலாய் உள்ளனர் என்பதை நன்றாக அறியமுடிகிறது.

இந்திய திருநாட்டின் வளர்ந்த மாநிலங் களில் ஒன்று தமிழ்நாடு. அதிக மருத்துவக் கல்லூரிகள் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. மருத்துவ கல்லூரியில் சேர்வதற்கு நீட் தேர்வு என்ற ஒரு புதிய தேர்வை அறிமுகப்படுத்தி ஏழை எளிய அரசுப் பள்ளி மாணவர்களின் கனவை சிதைத்த மத்திய அரசின் நடவடிக்கையை மாநில அரசு கண்டும் காணாமல் இருந்தது. உறுதியான கொள்கை முடிவு எடுத்து நீட் தேர்வை ரத்து செய்வதற்கு உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சரியாக வாதாட வில்லை என்றும், மத்திய அரசோடு போராட வில்லை என்றும், தமிழக மக்களுக்கு, மாணவர் களுக்கு மிகப்பெரிய வருத்தம் இன்று வரை நீடிக்கிறது. +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று டாக்டர் ஆக வேண்டும் என்ற கனவோடு இருந்த எண்ணற்ற மாணவ,மாணவிகளின் கனவை சுக்கு நூறாக்கிய நீட் தேர்வு, மாணவி அனிதா உட்பட பலர் இந்த ஏமாற்றத்தைத் தாங்கி கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர். நீட் தேர்வில் அரசுப்பள்ளி மாணவர்களும், ஏழை எளிய குடும்பங்களில் பிறந்த மாணவர்களும் போட்டி போட முடியாத நிலையில் தமிழக மருத்துவ கல்லூரிகளில் வசதிபடைத்த மாணவர்களுக்கும், வெளிமாநில மாணவர்களுக்கும் வாய்ப்பாக அமைந்ததை மண்ணின் மைந்தர்களாக உள்ள தமிழக மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரும் ஒரு போதும் ஏற்க மாட்டார்கள். 2021 சட்டமன்ற தேர்தலில் இவர்களின் வாக்குகள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என கருதுகின்றனர்.

அதே போல தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டம், அதை ஒட்டிய துப்பாக்கிச்சூடு, காவேரி டெல்டா மாவட்டங்களில் 400-க்கும் மேற்பட்ட பகுதிகளில் மீத்தேன் எடுப்பது தொடர்பாக மத்திய அரசு அறிவித்த திட்டங்கள், நவோதயா பள்ளிகள் மூலம் இந்தி திணிப்பு இது போன்ற எண்ணற்ற செயல்கள், தமிழக மக்கள் விரும்பாத மத்திய அரசின் உத்தரவுகளை தமிழக அரசு பாராமுகமாக இருந்ததை தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

போராடிப்பெற்ற உரிமைகளை ஒவ்வொன்றாக பறிகொடுத்ததாக உணர்ந்தார்கள்.

குறிப்பாக மாநில அரசின் வேலை வாய்ப்புகள் அனைத்தும் தமிழக இளைஞர் களுக்காக மட்டுமே இருந்து வந்ததை முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா இறந்த பின்பு போட்டித் தேர்வுகள் மூலம் இந்தியா முழுவதுமுள்ள இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என்ற தமிழக அரசின் உத்தரவு தமிழக இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறித்ததாகவே உணர்ந்தார்கள். கர்நாடகா, மராட்டியம், குஜராத், பீகார் போன்ற பல மாநிலங்களில் மாநில அரசின் வேலை வாய்ப்புகள் அனைத்தும் அம்மாநில மக்களுக்கே வழங்கப்படும் என்ற சட்டம் இயற்றியதை அறிந்தும், தெரிந்தும் தமிழக வேலை வாய்ப்புகளை அனைவருக்கும் திறந்து விட்டதை மிகப்பெரிய துரோகமாக தமிழக இளைஞர்கள், மக்கள் நினைக்கிறார்கள். இந்த நிகழ்வு எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் எதிர்வினையாற்றும் என்று சமூக ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

சென்ற சட்டமன்ற தேர்தலில் அதிமுகவின் தேர்தல் அறிக்கையில் புதிய பென்சன் திட்டம் ரத்து செய்யப்பட்டு பழைய பென்சன் திட்டம் கொண்டு வரப்படும் என்று முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சொன்னதை இன்று வரை கொண்டு வர முடியாதவர்கள் மீண்டும் தனது தேர்தல் அறிக்கையில் அதே பல்லவியை பாடி வருகின்றனர். இதை எந்த அரசு ஊழியரும் நம்ப தயாராக இல்லை என்பதே உண்மை நிலையாக உள்ளது.

மேற்கண்ட நிகழ்வுகளும் இதுபோன்ற பல நிகழ்வுகளும் தமிழக மக்களுக்கு, மாணவர் களுக்கு, இளைஞர்களுக்கு, விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, என்று அனைத்து தரப்பிற்கும் பாதிப்பு ஏற்பட்ட சூழலில் நாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். மேற்கண்ட அனைத்திற்கும் எதிராக இடதுசாரி சிந்தனை கொண்ட மக்கள் போராடி உள்ளனர், வாதாடி வந்துள்ளனர். இந்த போராட்டம் சட்டமன்றத்திலும் ஒலிக்க வேண்டும் என்று சொன்னால் இடதுசாரி வேட்பாளர்களுக்கு கட்டாயம் தொழிலாளி வர்க்கம் வாக்களிக்க வேண்டும்.

ஒரு விரல் புரட்சி மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

**- தி. ஜெயசங்கர்**



கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவர்

தோழர் **தா. பாண்டியன்** மறைவு

பொதுவாழ்வில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், இந்திய அரசியலில் மதவாத சக்திகளுக்கு எதிராகவும், ஜனநாயகத்திற் காகவும், உழைக்கும் மக்களின் நலன் களுக்காகவும் போராடிய சிறந்த போராளியாக திகழ்ந்தவர் அவரது மறைவுக்கு தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு அஞ்சலியை செலுத்துகிறது.



## தோழர் **ஏ.ஜி. காசிநாதன்**

மறைவு (13.2.2021)

ஒன்றுபட்ட சென்னை மாவட்ட தொழிற் சங்கத் தலைவர்களில் ஒருவரும் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் சங்கத்தின் முன்னோடியுமான மறைந்த தோழர் ஏ.ஜி. காசிநாதன் அவர்களுக்கு தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறது.




# கேங்மேன் வழக்கும்! மத்திய அமைப்பின் நடவடிக்கையும்!!

தமிழக மின்வாரியத்தில் ஆரம்பகட்ட பதவியான களஉதவியாளர் பதவிக்கு பதிலாக கேங்மேன் என்ற புதிய பதவியை உருவாக்கி மின்வாரிய ஆணை 8 நாள் 2.03.2019 மூலம் மின்சார வாரிய நிர்வாகம் உத்தவிட்டது.

தொழிற்சங்கங்களோடு கலந்து பேசாமல், தொழிற்தகராறு சட்டத்தை மதிக்காமலும் இருந்த போக்கே இருந்தது. புதியதாக 5000 பதவிகள் உருவாக்கப்படும் போது களப்பிரிவில் மூன்றாண்டுகளுக்கு மேல் காலிப்பணி இடங்களாக உள்ள 5000 பதவிகளை ஒழிக்கப்படும் என்ற ஷரத்தும் சேர்க்கப் பட்டிருந்தது.

கடந்த 22.02.2018-ல் ஏற்பட்ட ஊதிய உயர்வு வேலைபளு ஒப்பந்தத்தில் பயிற்சி காலங்கள் ரத்து செய்யப்பட்டது. ஆனால் தற்போது கேங்மேன் பயிற்சி என்ற முறையில் இரண்டாண்டுகள் ரூ. 15,000/- தொகுப் பூதியமாக வழங்கப்படும் என குறிப்பிட்டி ருந்தது. அதே போல பயிற்சி காலம் முடிந்ததும் கேங்மேன் மஸ்தூர் 2-ம் நிலைக்கு சமமான பதவியாகவும், சீனியர் கேங்மேன் களஉதவியாளர் பணிக்கு சமமாகவும், சீப் கேங்மேன் கம்பியாளர் பதவிக்கு சமமான ஊதியங்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது மேலும் அந்த பதவியில் தேர்வானவர்கள் அதற்கு மேல் செல்வதற்கு வாய்ப்பு இல்லை.

அடுத்து கேங்மேன் தேர்வு செய்வதற்கு குறைந்தபட்ச கல்வி 5-ம் வகுப்பு, அதிகபட்ச கல்வி தகுதிக்கு வரை முறையே கிடையாது. வயது வரம்பும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 46 வயதும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 37 வயதும், இதரர்கள் 35 வயதும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவைகளை கணக்கில் கொண்டு மின்சார வாரியம் பிறப்பித்த உத்தரவில் கீழ்க்கண்ட மாற்றங்களை செய்திட 11.03.2019 அன்றே மின் ஊழியர் மத்திய அமைப்பு கடிதம் கொடுத்தது.

1. மின்வாரியம் அறிவித்துள்ள கேங்மேன் என்பதற்கு பதிலாக களஉதவியாளர் என்று மாற்றம் செய்திட வேண்டும்.
2, உயர்ந்து வரும் மின் இணைப்பு களுக்கேற்ப பணிகளை கணக்கில் கொண்டு அறிவித்துள்ள 5000 பதவி களை 10,000 ஆக உயர்த்திட வேண்டும்.
3. மின்சார வாரிய உத்தரவில் சொல்லப் பட்டுள்ள 5000 பதவிகளை ரத்து செய்வது என்ற சரத்து நீக்கப்பட வேண்டும்.

4. களஉதவியாளர் பதவியை நிரப்ப பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டும், ஐடிஐ படித்தவர்களைக் கொண்டும் பணி நிரந்தரம் செய்திட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தொழிற் சங்கங்களோடு ஒப்பந்தம் காண வேண்டுமென வலியுறுத்தினோம்.

ஆனால் மின்சார வாரிய நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு அழைக்காத காரணத்தால் வேறு வழியின்றி நீதிமன்றம் சென்றோம்.

வழக்கு நிலுவையில் இருக்கின்ற போது மின்சார வாரிய நிர்வாகம் கேங்மேன் பணி இடங்களை நிரப்ப, அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவும், நியமன உத்தரவு மட்டும் வழங்கக்கூடாது என இடைக்கால தீர்ப்பை பெற்றனர்.

இந்நிலையில் நமது ஒப்பந்த ஊழியர்களும் இந்த வயது, மற்றும் கல்வித்தகுதி வரம்புக்குள் வருகின்றவர்கள், கேங்மேன் பதவிக்கு விண்ணப்பிக்க தொடங்கினார்கள்.

எனவே நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தாலும் விண்ணப்பித்தவர்களின் வேண்டுகோளையடுத்து பயிற்சி மையங்களை துவங்கி களப்பயிற்சியும், எழுத்து தேர்வு பயிற்சியும் நடத்துவது என்ற முடிவை எடுத்த மின் ஊழியர் மத்திய அமைப்பு 22 மையங்களில் பயிற்சி மையங்கள் நடத்தியது. அதனையடுத்து மின்வாரிய நிர்வாகத்தால் உடற்தகுதி தேர்வும், எழுத்து தேர்வும் நடத்தப்பட்டு சுமார் 14954 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தில் பல்வேறு சங்கங்களும், தனி நபர்களாலும் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 152. அதே வேளையில் மின்சார வாரிய நிர்வாகம் கேங்மேன் பதவி நிரப்புவதற்காக வெளியிடப் பட்ட வாரிய உத்தரவு எண்.8 நாள் 02.03.2019-ல் மின்வாரிய உத்தரவில் உள்ள ஷரத்தான 5000 பதவிகள் ஒழிப்பது என்பதை நீக்கி உத்தரவிட்டது.

கேங்மேன் பதவிகளை நிரப்ப தொழிற்சங்கங்கள் வழக்கு தான் காரணம் என மின்துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து அறிவித்து வந்திருந்தார். ஆனால் உண்மையில் அதுவல்ல காரணம். மின்வாரிய நிர்வாகம் புதிய பதவிகளில் பணியாளர்களை நியமிக்கக் கூடாது என்ற முடிவோடு மின்வாரிய ஆணை எண். 82 நாள் 16.12.2020 உத்தரவின் மூலம் 50 சதவீதத்திற்கும் மேலான விநியோகம் பிரிவில், உபகோட்ட அளவில் காலி உள்ள இடங்களை ஒர்க்ஸ் காண்ட்ராக்ட் (Works Contract) என்ற பெயரில் நியமிக்க உத்தரவிட்டது. இந்த உத்தரவை கடந்த 21.12.2020 அன்று நடத்திய காத்திருப்பு போராட்டத்தின் மூலம் தொழிற்சங்கங்கள் ரத்து செய்ய வைத்த காரணத்தால் தான் கேங்மேன், ஒப்பந்த ஊழியர், ஐடிஐ படித்தவர்களை எதிர்காலத்தில் நிரப்புவதற்கு வழிவகுத்தது.

ஒப்பந்த ஊழியர்களாக இருந்து கேங்மேன் பதவிக்கு தேர்வானவர்கள் ஏறத்தாழ 60 முதல் 70 சதவீதம் உள்ள நிலையில் அவர்களது வேண்டுகோளை ஏற்றும் மின்வாரியத்தில் களப்பிரிவில் நமது ஊழியர்களின் வேலைப்பளுவை கணக்கில் கொண்டும், மின்வாரியத்திற்கும், மின்துறை அமைச்சருக்கும் கேங்மேன் பதவிகளை நிரப்ப எழுத்துப் பூர்வமாக கடிதம் கொடுத்தோம்.

**அந்த கடிதத்தில்...**

- ★ கேங்மேன் பதவிக்கு தேர்வான அனைவருக்கும் பணி நியமன ஆணை வழங்கிடுக!
- ★ கஜா புயல், தானே புயல், ஒக்கி புயல், சென்னை வெள்ளம் உள்ளிட்ட பேரிடர் காலங்களில் மின் தடைகளை சரிசெய்து மின் விநியோகத்தை சீரமைத்த இந்த ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு 22.02.2018-ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்த அடிப்படையில் வாரியமே தினக்கூலி ரூ.380/- நேரிடையாக வழங்கிட வேண்டும் எனவும்.
- ★ அதே போல ஏற்கனவே அறிவித்த 2900 ஐடிஐ பணியாளர்களையும் நியமிக்க வேண்டுவதோடு, ஆரம்பக்கட்ட பதவிகளான உதவிப்பொறியாளர், கணக்கீட்டாளர், தொழிற்நுட்ப உதவியாளர், இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு எழுத்துத் தேர்வு தேதியை அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

மேலும் நமது வழக்கறிஞர் திரு என்.ஜி.ஆர். பிரசாத் அவர்களிடம் நமது கருத்துக்களை தெரிவித்தோம். அதனடிப் படையில் கடந்த 22.02.2021-ல் வழக்கு விசாரணைக்கு வந்த பொழுது, 5000 கேங்மேன் பதவியை இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டு வெளியிடலாம் என்றும், ஒப்பந்த ஊழியர்களுக்கு எந்தவித பாதிப்பு ஏற்படக் கூடாது எனவும் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் இடைக்கால தீர்ப்பளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வாரிய அதிகாரிகளிடம் பேசி, கேங்மேன் பதவிக்கு தேர்வானவர்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணை வழங்க கோரினோம். அதனடிப் படையில் 9,613 பேர்களுக்கு பணி நியமன உத்திரவு 22.02.2021 அன்றே வழங்கப் பட்டது.

மின்துறை அமைச்சரை இருமுறை தொடர்பு கொள்ள முயற்சித்து. இறுதியாக 26.02.2021-ல் சந்தித்து ஏற்கனவே அவரிடம் அளித்த கோரிக்கையான ஒப்பந்த ஊழியர் அடையாளங்கண்டு ரூ.380/- நேரிடையாக வழங்கக்கோரி வலியுறுத்திய பொழுது, தான் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சரிடம் பேசிவிட்டதாகவும், இன்று 26.02.2021 மாலை 6 மணிக்கு கோட்டையில் அனைத்து சங்கத்தினரையும் சந்திப்பதாகவும், மேலும் 27.02.2021-ல் பணி நியமன உத்திரவு வழங்கும் நிகழ்ச்சியில் முதல்வர் நல்ல முடிவை அறிவிப்பார் எனத் தெரிவித்தார்.

ஆனால் மதியமே தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட காரணத்தாலும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்த காரணத்தாலும் மின்துறை அமைச்சரை சந்திக்க இயலவில்லை.

தோழர்களே!

மின் ஊழியர் மத்திய அமைப்பு தனது நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் திறந்த மனதுடன் நடத்தி வந்தோம். அதனால் தான் நாம் கேங்மேன் பதவியை ரத்து செய்து களஉதவியாளர்களாக நியமிக்க வேண்டும். அவர்களை கேங்மேன்,சீனியர் கேங்மேன், சீப் கேங்மேன் என்ற வழியில் புதிதாக உருவாக்கப்பட்ட பதவிகளை ரத்து செய்து, களஉதவியாளர், கம்பியாளர்/வணிக ஆய்வாளர். மின்பாதை ஆய்வாளர்/ வணி ஆய்வாளர். முகவர் முதல் நிலை, சிறப்பு நிலை முகவர் என்ற வரிசைக்கு வருவதோடு,படித்தவர்களை உள்முக தேர்வு மூலம் அதற்கு தகுதியான பதவியை வழங்க வேண்டும் என குரல் கொடுத்து வருகிறோம்.

பயிற்சி மையங்களில் எழுத்துத் தேர்வுகளையும் நடத்தி பயிற்சி அளித்தோம். தற்போது வழக்கு தடையல்ல என நாம் கூறி வருவதை நிரூபித்து காட்டியுள்ளோம்.

மின்வாரியத்தில் களப்பிரிவில் உள்ள பல்லாயிரம் காலியிடங்களை நிரப்பிட குறிப்பாக ஒப்பந்த ஊழியர்களை அடையாளங் கண்டு ரூ. 380/- தினக்கூலியை வாரியமே நேரிடையாக வழங்கிட அனைவரும் இணைந்து போராடுவோம்!

கேங்மேன் பணியாளர்களை ஸ்தாபனப் படுத்துவோம்! முன்னேறுவோம்!

**- எஸ்.இராஜேந்திரன்**



# வாழ்த்துகிறோம்

சிவகங்கை மின் திட்டம்,மானாமதுரை கோட்டம் உதவி மின்பொறியாளர், 110 KV துணை மின்நிலையத்தில் முகவராக பணிபுரிந்த தோழர் **எம். செபஸ்தி** அவர்கள் 6.2.2021 அன்று சிறப்பு நிலை முகவராக பதவி உயர்வு பெற்று காரைக்குடி கோட்டம் உதவி மின்பொறியாளர் / நகர் தேவக்கோட்டையில் பணி ஏற்பு செய்தார். சிறப்பு நிலை முகவராக பதவி உயர்வு பெற்று தந்த நமது சங்கத்தை பாராட்டி மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/- அளித்தார். வாழ்த்துக்கள்




# வஞ்சிக்கப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள்!

- தி. ஜெயசங்கர்

மின்சார வாரியத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணமாக இருந்தவர்கள், இருப்பவர்கள் மற்றும் இருக்க போகிறவர்கள் ஒப்பந்த ஊழியர்கள் தான் என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழக மின் வாரியத்தில் கன்னியாகுமரி முதல் கும்மிண்டியை தாண்டிய ஆந்திர மாநில எல்லை வரை, இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து கோவை மாவட்டத்தை தாண்டி கேரள மாநில எல்லை வரை அதே போல மலைப்பகுதிகளான குந்தா, காடம்பாறை, கொடைக்கானல் போன்ற மலை கிராமங்களுக்கும் மின்சாரத்தை கொண்டு செல்வதற்காக உயர்மின் அழுத்த பாதைகளை, தாழ்வழுத்த மின்பாதைகளை கொண்டு சென்றவர்கள் களப்பணி ஊழியர்களும், ஒப்பந்த தொழிலாளர்களும் தான் என்பது வரலாறு. மின்சார கம்பியை கொண்டு சென்று அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கிய பெருமை தமிழக அரசக்கு சேரும் என்று சொன்னால் அந்த பெருமையை பெற்று தந்தவர்கள் அந்த பெருமைக்கு காரணம் ஆனவர்கள் உண்மையில் களப்பணி ஊழியர்களும், ஒப்பந்த தொழிலாளர்களும் தான்.

இந்த வரலாறுகளை பின்னோக்கி பார்த்தால் அதன் வலியும் வேதனையும் புரியும். மேற்குமலை தொடர்ச்சியில் ஆழியாறு அணைக்கட்டு கட்டும் பணியில் பணிசெய்த தொழிலாளர்களை பணி முடிந்தவுடன் வேலை இல்லை என்று அனுப்பியது மின்வாரிய நிர்வாகம். தமிழக அரசை எதிர்த்து அக்காமலை இராமசாமி மற்றும் தோழர் கே.ரமணி அவர்கள் இணைந்து அணைகட்டு தொழிலாளர் சங்கம் துவக்கி போராட்டம் நடத்தியது. சட்டமன்றத்தில் தோழர் பூபதி அவர்கள் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவை கேள்வி கேட்டு, அதன் பிறகு அவர்களுக்கு பணியை பெற்று தந்தது மின் ஊழியர் மத்திய அமைப்பு. அன்று தொடங்கிய ஒப்பந்த தொழிலாளர் போராட்ட வரலாறு. அடுத்த கட்டமாக உச்சநீதி மன்ற மேன்மை தாங்கிய நீதியரசர் காலித் மூலமாக 18,006 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் பெற்றனர். அதன் பின்னர் விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் என்ற நிலையில் அவர்களுக்கு பணி வழங்க நாம் செய்த போராட்டங்கள் எண்ணற்றவை. ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஈ.பி.எப். பிடித்தம் செய்ய வேண்டுமென்ற தொழிற்தகராறு வழக்கு ID 106 போன்றவைகள் மூலமாக கொடுக்கப்பட்ட நெருக்கடியின் காரணமாகவும், 2005-ம் ஆண்டு மே மாதம் 13 நாட்கள் தொடர் வேலை நிறுத்தம் 2005-ம் ஆண்டு நவம்பர் 3 முதல் 37 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தபிறகு தமிழக அரசு பணிந்தது. 2500 ஒப்பந்த தொழிலாளர்கள் மஸ்தூர்

பயிற்சியாளராகவும், 15,000 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கருணைத் தொகையும் பெற்றுத்தந்தது மத்திய அமைப்பு. இதன் தொடர்ச்சியாக 10.08.2007 ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2008-ம் ஆண்டு 8500 ஒப்பந்த தொழிலாளர்கள் மஸ்துராராக அதன் பின்னரே ஒவ்வொரு ஆண்டும் 6000 ஒப்பந்த பணியாளர்கள் மஸ்தூர் என 21600 ஒப்பந்த தொழிலாளர்கள் மஸ்தூராக பணி நிரந்தரம் செய்யப்பட்ட வரலாறு மின் ஊழியர் மத்திய அமைப்பின் வரலாறு.

இந்த வரலாற்றை யாரும் திரைபோட்டு மூட முடியாது. பணி நிரந்தரம் பெற்ற ஒப்பந்த தொழிலாளி சங்கத்தை மறந்திருக்கலாம். சிஐடியு ஒரு போதும் அவர்களை மறப்பதில்லை. அதனால் தான் EPF வழக்கு இன்றும் தொடர்கிறது.

இதன் தொடர்ச்சியாக மின்சார வாரியம் 2008 பிப்ரவரி மாதம் ஒரு உத்தரவை வழங்கியது. அது ஏற்கனவே வழங்கப்பட்ட 05.01.1998 உத்தரவை மீண்டும் பிறப்பித்து, 05.01.1998-க்கு பிறகு எந்த ஒப்பந்த ஊழியரும் வேலை செய்யவில்லை என்ற பிரிவு அலுவலக பொறியாளரிடம் (Undemand) பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டது, 05.01.1998-க்கு பிறகு பணி செய்தவர்களை, பணி நீக்கம் செய்தது நிர்வாகம். அதாவது 1998 முதல் 2008 வரை 11 ஆண்டுகள் பணி செய்தவர்களை ஈவு இரக்கமின்றி எந்த கருணையும் காட்டாமல் பணி நீக்கம் செய்ததை எதிர்த்து மின் ஊழியர் மத்திய அமைப்பு நீதிமன்றம் சென்றது. இதில் வேதனை என்னவென்றால் 11 ஆண்டுகள் பணியை வாங்கிகொண்ட பிரிவு பொறியாளர்கள் மீது 05.01.1998 வாரிய உத்தரவின் அடிப்படையில் ஒப்பந்த தொழிலாளர்களை பணியில் அமர்த்தி வேலை வாங்கியதற்காக பொறியாளர்கள், மற்றும் அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் பாயாதது ஏன் என்ற கேள்விக்கு இன்று வரை பதில் இல்லை.

பிப்ரவரி 2008-ல் வேலை இல்லை என்று துரத்தப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களை அணி திரட்டி போராட்டங்கள் செய்தது மட்டுமல்ல. 4631 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பணி வழங்கிட வேண்டுமென நீதிமன்றத்தை அணுகினோம். நீதியரசர் 1800 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பணி வழங்க ஆணை பிறப்பித்தார். மற்றவர்கள் தொடர்ந்து பணி செய்யவில்லை என்று பணி வழங்கவில்லை. இருப்பினும் ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கையை வைத்து தொடர்ந்து மின்சார வாரிய நிர்வாகத்திடம் பேசி வருகிறோம்.

கடந்த 22.02.2018 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் ஒப்பந்த தொழிலாளர்கள் வாழ்க்கையில் ஒருமாற்றத்தை ஏற்படுத்த இயலும் என மத்திய அமைப்பு நம்பியது. சில சங்கங்கள் காட்டிய எதிர்ப்பின் காரணமாக அது நிறைவேறாமல் போனது. அதற்காக பல்வேறு இயக்கங்களை நாம் நடத்தினோம். அமைச்சரிடம் பலகட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். உறுதியளித்த அமைச்சர் தான் கேங்மேன் என்ற புதிய பாதையை அறிமுகப்படுத்தினார். இருப்பினும் ஒப்பந்த தொழிலாளர்கள் மின்சார வாரியத்தை நம்பி வயதை, வாழ்க்கையை அர்ப்பணித்து கொண்டவர்கள், 40 வயதை கடந்த பின்பு அவர்களால் வேறு எந்த துறைக்கும் பணிக்கு செல்ல இயலாது என்ற காரணத்தால் இங்கேயே சரணம் என இருந்து விட்டனர். அவர்களுக்கு தினஊதியமாக நுகர்வோரும், பிரிவு அலுவலகத்தின் முகவரும், பிரிவு அலுவலரும் கொடுப்பது என்பது தொடர்கதையாகி வருகிறது. மாதாமாதம் முதல் வாரத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை என்ற சத்தியபிரமாணம் செய்கின்ற பிரிவு பொறியாளர்களே, மேல்மட்ட அதிகாரிகளே தங்கள் அலுவலகத்தில் விபத்தில் இறந்து போகும் ஒப்பந்த தொழிலாளர்கள் யார்? விபத்தில் கை இழந்தும், கால் இழந்தும் போகின்ற தொழிலாளர்கள் யார்? வர்தா புயல் வந்த போதும், ஒக்கி புயல், தானே புயல் வந்த பொழுது இராணுவ வீரனாக களத்தில் சென்று மின்தடைகளை நீக்கி, மின் கம்பங்களை நட்டு பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு விரைந்து மின்சாரம் வழங்கி, மின்சார வாரியத்திற்கும், தமிழக அரசுக்கும் நற்பெயரைப் பெற்றுத்தந்த

ஒப்பந்த தொழிலாளர்களை மறந்து விடுவது நியாயமா? மின்துறை அமைச்சரே! பணி செய்த ஒப்பந்த தொழிலாளர்களை பாராட்டி, சான்றிதழ் தருவேன்! விழா எடுப்பேன் என்று சொன்னதை யெல்லாம் மறந்து விட்டு கேங்மேன் என்ற புதிய பாதையை கையாண்டு எங்களை கைகழுவி விட்டீரே! நியாயமா! என்ற ஒப்பந்த தொழிலாளர்களின் அவலக்குரல் உங்களுக்கு கேட்கவில்லையா? கேங்மேன் வருவதை நாங்கள் தடுக்கவில்லை, வரவேற்கின்றோம், அதே நேரம் மீதமுள்ள பல்லாயிரம் காலிப் பணியிடங்களில் எங்களுக்கும் வாய்ப்பு கொடுங்கள் என்று தானே கேட்கின்றார்கள்.

மின்வாரியத்தில் ஒப்பந்த தொழி லாளர்கள் இல்லை என்று சொல்வது தவறான வாதமாகும். ஒப்பந்தகாரரிடம் பணி செய்யும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும், மின்வாரியத் திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொல்வது **Contract Labour Regulation and Abolition Act 1972** -ன் படி எதிரானதாகும். மின்வாரியத்தில் ஒப்பந்தகாரரிடம் பணி செய்யும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு முதன்மை முதலாளி (Principal Employer) தமிழக மின்சார வாரிய நிர்வாகமேயாகும்.

எனவே தமிழக அரசும், மின்சார வாரியமும் ஒப்பந்த தொழிலாளர்களின் நலன்களை புறக்கணித்துவிட்டு சட்டத்தையும் கவனத்தில் கொள்ளாமல் இருப்பது மனித நேயமற்றது. சிக்கன சேமிப்பு என்ற நடவடிக்கையின் பெயரால் (Works Contract) ஒர்க்கஸ் கான்ட்ராக்ட் (Out Sourcing) அவுட் சோர்சிங் என புதுப்புது வார்த்தை ஜாலங்களால் தனியார் மயத்தை நோக்கி நகர்கின்ற மின்சார வாரிய நிர்வாகமே மின்வாரியத்தை தனியாரிடம் கொடுக்க நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். ஒப்பந்த தொழிலாளர்களை புறக்கணிக்கும், தமிழக அரசே! மின்சார வாரியமே!! அவர்களுக்கு விடியல் ஏற்படும் வரை எங்கள் கோரிக்கையும் ஓயாது! போராட்டமும் ஓயாது!!

---



## அணைக்கட்டு தொழிலாளர் சங்கத்தின் போராட்ட வீராங்கனை தோழர் ஆண்டம்மாள் மறைவு

காடம்பாறை மின் உற்பத்தி திட்டத்தில் பணியாற்றிய ஒப்பந்த ஊழியர்களை ஒன்றுதிரட்டி அணைக்கட்டு தொழிலாளர் சங்கம் என்று நமது மூத்த முன்னோடிகள், தோழர்கள், கே.ரமணி, வி.துளசிதாஸ், கே.சி.கருணாகரன், கே.ராமசாமி, அலி உள்ளிட்ட தலைவர்களால் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு மத்திய அமைப்புடன் பின்னர் இணைக்கப்பட்டது.

ஆரம்பகட்டத்தில் அணைகட்டு தொழிலாளர் சங்கம் சார்பாக நடத்திய எண்ணற்ற போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு காடம்பாறை, ஆளியார் போராட்டங்களில் களத்திலே நின்று போராடிய தோழர் ஆண்டம்மாள் அவர்கள்.

தொழிலாளி வர்க்கத்தை நேசித்தது மட்டுமல்ல, இடதுசாரி கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலும் பணியாற்றிவர்.

போராட்ட காலங்களில் நடைபெற்ற ஒரு நிகழ்வை எங்களோடு பகிர்ந்து கொண்டதில் இந்த நேரத்தில் பதிவு செய்ய வேண்டியது அவசியம்.

போராட்ட காலத்தில் நமது தலைவர்கள் காடுகளில் மறைந்திருக்கும் பொழுது அவர்களுக்கு உணவு கொடுப்பதற்காக போலீசை ஏமாற்றி உணவு பொட்டலத்தை தனது சேலையில் வைத்து இடுப்பில் சுற்றிக்கொண்டு, தலைவர்களுக்கு கொண்டு போய் கொடுப்பார். காவல்துறை தன்னிடம் நெருங்கி வராமல் இருக்க பக்கெட்டில் மலத்தை நிரப்பி காட்டில் கொட்டப் போகிறேன் என்று ஏமாற்றி தலைவர்களுக்கு உணவு அளித்ததாக தெரிவித்தார்.

உண்மையிலேயே இது போன்ற தோழர்களின் தியாகத்தால் உருவானது. நம்முடைய தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு, அதனை பலப்படுத்துவதே தோழர் ஆண்டம்மாள் போன்றவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

**வீரவணக்கம் தோழர் ஆண்டம்மாள் அவர்களுக்கு**

## மின்வாரிய ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு சம்மந்தமாக மாண்புமிகு மின்துறை அமைச்சரையும் மற்றும் வாரியத் தலைவரையும் சந்தித்து கோரிக்கை பட்டியல் அளிக்கப்பட்டது

நாள் 23.02.2021

**பெறுநர்**

★ மாண்புமிகு **திரு.பி.தங்கமணி** அவர்கள்
தமிழக எரிசக்திதுறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

★ **தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்
144, அண்ணாசாலை,
சென்னை 600 002

**மற்றும் ஊதிய பேச்சுவார்த்தைக்குழு உறுப்பினர்கள்**

- ★ இயக்குநர்/ நிதி TANGEDCO அவர்கள்
- ★ நிர்வாக இயக்குநர் TANTRANSCO அவர்கள்
- ★ இயக்குநர்/ உற்பத்தி TANGEDCO அவர்கள்
- ★ இயக்குநர்/ விநியோகம் TANGEDCO அவர்கள்
- ★ செயலாளர்/ TANGEDCO அவர்கள்
- ★ தலைமை பொறியாளர் /பணித்தொகுதி TANGEDCO அவர்கள்
- ★ தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலகம்/ பொது / TANGEDCO அவர்கள்

ஐயா

பொருள் : தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர்கள், அலுவலர்கள், பகுதி நேர தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் ஆகியோருக்கு 01.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு - படிகள் - நிரந்தரம் மற்றும் சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகள் இதர சலுகைகள் சம்மந்தமான கோரிக்கை பட்டியல் மீது பேச்கவார்த்தையை தொடர்ந்து நடத்தி தீர்வுகாண வேண்டுதல் - தொடர்பாக

பார்வை : 1. மின் ஊழியர் மத்திய அமைப்பு கடித நாள்
2. வாரிய உத்தரவு (Per) CMD TANGEDCO Proceedings No.224 dt 07.12.2019

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் 83,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள், பகுதிநேர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் 01.12.2019 முதல் ஊதிய உயர்வு உள்ளிட்ட சலுகைகள் சமூகபாதுகாப்பு, ஒப்பந்த ஊழியர் பணி நிரந்தரம் உள்ளிட்டவைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமூகமான ஒப்பந்தம் காண வேண்டும் என்ற நோக்கோடு பட்டியலை இணைத்துள்ளோம்.

நாடு முழுவதும் ஏறிவருகின்ற விலைவாசி உயர்வு என்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சமீப காலங்களில் பெட்ரோல், டீசல், எரிவாயு உருளை ஆகியவற்றின் விலை அனுதினமும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது. தமிழக மக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். இந்த பாதிப்பு மின்வாரிய பணியாளர்களையும் விட்டு வைக்கவில்லை.

மின்வாரியத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். வாரிய நிர்வாகத்தால் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்கான குழு பார்வை இரண்டில் கண்ட குறிப்பாணை வாயிலாக அமைக்கப்பட்டது.

இந்தக்குழு அமைக்கப்பட்டு ஓராண்டு கடந்த நிலையில் பேச்சுவார்த்தை துவக்கப்படவில்லை. இடையில் கொரோனா தொற்று நோய் காரணமாக தேசம் ஒரு அசாதாரண சூழ்நிலையில் இருந்த காரணத்தால் மின்வாரிய பணியாளர்களும் அரசுடன் இணைந்து நின்று மக்கள் சேவையை அளித்து வந்தனர்.

மின்வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் 1,38,046 ஆனால் தற்போது 83,900 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். காலிப்பணி இடங்களோ 54,000-க்கும் மேல் காலிப்பணி இடங்களாக உள்ளன. இதில் 3,07,54,000-க்கும் மேற்பட்ட மின் நுகர்வோர்களுக்கு சேவை செய்யும் ஆரம்பக்கட்ட பதவிகளான, உதவியாளர் மற்றும் கம்பியாளர், 31,000 பதவிகளும், கணக்கீட்டாளர் பதவியில் 3500-க்கும் மேற்பட்ட பணி இடங்களும், அதே போல் 1500-க்கும் மேற்பட்ட உதவிப்பொறியாளர் பணி இடங்களும் காலியாக உள்ளன. கூடுதல் பணிச்சுமையை மின்வாரிய பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

கடந்த நான்கு நிதியாண்டு காலங்களில் மின்சாரத்தை விநியோகித்த வகையில் 2016-17 ஆம் ஆண்டுகளில் 43964.40/- கோடிக்கும் அதன் பின்னர் 2019-20-ல் தொடர்ச்சியாக ரூ. 49,413.24 கோடிக்கும் என மின்சாரத்தை விற்பனை செய்துள்ளது. ஆனால் இதே காலத்தில் பணியாளர்களின் ஊதியம், உள்ளிட்ட நலன்களுக்காக 2019-20-ல் 18.8/-சதவீதம் மட்டுமே செலவு செய்துள்ளது. ஆனால் தனியார் மின் உற்பத்தியாளர்களிடத்தில் 2016-17-ம் ஆண்டில் 35692.33/- கோடியில் மின்சாரத்தை கொள்முதல் செய்தது, 2019-20 -ம் ஆண்டில் ரூ.44,182.47 கோடிக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்துள்ளது.

மாநில மின்வாரியத்திற்கு சொந்தமான உற்பத்தி நிலையங்களை முழுவீச்சில் நவீனப்படுத்தி உற்பத்தி செய்வித்தால் தனியார் முதலாளிகளிடம் மின்சாரத்தை அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டிய நிலை இருக்காது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழக மின் வாரியத்தில் கடந்த 22.02.2018-ல் ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் வேலை பளு ஒப்பந்தத்தில் ஒவ்வொரு ஆண்டும், கூடுதலாக வழங்கப்பட்ட மின் இணைப்புகளுக்கேற்ப நிறுவப்பட்ட மின் மாற்றிகளுக்கேற்ப புதிய பதவிகளை அனுமதித்து பதவி உயர்வுகள் மூலமாகவும், புதிய ஊழியர்களை தேர்வு செய்து பணி நிரப்பப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் புதிய பதவிகளுக்கான அனுமதியும் ஏற்கனவே உள்ள காலிப்பணி இடங்களை நிரப்புவதற்கான பணி நடைபெறவில்லை என்பதை கவலையோடு குறிப்பிட விரும்புகிறோம்.

பகுதி நேர பணியாளர்களில் தகுதி உள்ளவர்களுக்கு உள்முகத் தேர்வில் வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் தொடர்ந்து வலியுறுத்தியும் அதே நிலை நீடித்து வருகிறது.

கணக்கீட்டாளர்கள், கம்பியாளர்கள், உள்ளிட்டோர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைத்தும் கீழ்மட்ட பணியை செய்யும் நிலையே தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால் மிகுந்த மனசோர்வுடன் மின்வாரிய பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தமிழக மின்வாரியத்தில் ஆயிரக்கணக்கான அனுமதிக்கப்பட்ட பதவிகள் காலிப்பணியிடங்களில் ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தி அவர்களிடத்தில் வேலை வாங்கப்படுகிறது. இவர்களை ஒப்பந்த தொழிலாளர்கள் என அங்கீகரித்து 22.02.2018-ல் ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூ.380/- தினக்கூலியாக வழங்கிட மின்வாரிய நிர்வாகம் மறுத்து வருகிறது. மின்வாரியத்தில் வளர்ச்சியில் அரும்பணியாற்றும் அனல்,புனல், பொதுக்கட்டுமான வட்டம் மற்றும் மின் விநியோக வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு மின்வாரிய நிர்வாகமே முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ளபடி ரூ.380/-ஐ நேரிடையாக வழங்கி பின்னர் ஏற்படும் காலிப்பணி இடங்களில் படிப்படியாக பணி நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்க வேண்டுகிறோம்.


எனவே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இத்துடன் இணைத்துள்ள கோரிக்கைப் பட்டியல் மீது பேச்சுவார்த்தை நடத்தி ஊதிய உயர்வை, வழங்குவதற்கும், அதற்கான பேச்சுவார்த்தையை தொடர்ந்திடவும் நடவடிக்கை எடுப்பதோடு ஒரு சுமூகமான உடன்பாடு எட்டிய பின்னரே ஒப்பந்தம் காண வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

நன்றி

(எஸ். இராஜேந்திரன்)
பொதுச் செயலாளர்

**கோரிக்கை பட்டியல் அடங்கிய புத்தகம் அனைத்து கிளைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்**





# சதிகளை சாய்த்து சாதனை படைக்கும் “ ஆந்தோலன் ஜீவிகள்”



தோழர் **வெ. மன்னார்**
மத்திய அமைப்பின் முன்னணி தலைவர்

ஆந்தோலன் ஜீவியா? யார் அது என்று கேட்கிறீர்களா? ஆம்! கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக தில்லியில் வரலாற்று சிறப்பு மிக்க போராட்டத்தை நடத்தி வரும் விவசாயிகளைத்தான், பிரதமர் மோடி ஆந்தோலன் ஜீவிகள் அதாவது போராட்டத்தின் மூலம் பிழைப்பவர்கள் என்று கூறி கேவலப்படுத்தியிருக்கிறார். இதனை பல தலைவர்கள் கண்டித்திருப்பதோடு, நாளும் மக்களின் பிரச்னைகளுக்காக போராட்ட களத்தில் தாங்கள் இருப்பதை பெருமையாக கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் அந்த பெருமை கார்ப்பரேட் ஜீவி அதாவது கார்ப்பரேட் முதலாளிகளுக்காகவே அவதாரம் எடுத்துள்ள பிரதமர் மோடியால் புரிந்துகொள்ள முடியாதுதான். ஏனெனில் பாஜகவுக்கோ அதை இயக்கும் சங் பரிவாரங்களுக்கோ மக்களை கூறு போட்டு கலவரத்தை உருவாக்கி அதில் குளிர் காய மட்டுமே தெரியும்? அதில் கொலை, கொள்ளை, வன்கொடுமைகள் செய்து அதன் மூலம் தங்கள் வாக்கு வங்கியை பெருக்கி ஆட்சிக்கு வந்தவர்கள் அவர்கள்? எனவே அவர்களுக்கு மக்களின் துயரங்களுக்காக, அவர்களின் அடிப்படை பிரச்னைகளுக்காக போராட்டம் நடத்துபவர்களை புரிந்து கொள்ள முடியாதுதான்!

## சுதந்திர இந்தியா காணாத வரலாறு

உலகின் கவனத்தை ஈர்த்து, ஐக்கிய நாடுகளின் சபை வரை சென்று உலக விவகாரமாகிவிட்ட விவசாயிகளின் போராட்டம் வர்ணிக்க இயலாத அளவிற்கு பிரம்மாண்டமான இயக்கமாக மாறிவருகிறது. இந்த போராட்டம் இந்த அளவிற்கு விசுவரூபம் எடுக்கும் என்று எதிர்பார்க்காத மோடி அரசு, போராட்டத்தை கொச்சைப்படுத்த ஆனமட்டும் முயன்றது. காலிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் என்றனர். பின்னர் இயக்கம் நடத்துபவர்களை பயங்கரவாதிகள், நக்சலைட்டுகள் என்றனர். அதன் பின் பாகிஸ்தான்,சீனாவின் சதி உள்ளது என்று இட்டுக்கட்டினர். பஞ்சாப் அரியானா விவசாயிகள் மத்தியில் உள்ள நீர்ப்பங்கீட்டு பிரச்னையை ஊதி பெரிதாக்கி பிளவுபடுத்த முயன்றனர்! ஆனால் எதுவும் எடுபடவில்லை? சாதி மத மொழி வேறுபாடுகளை கடந்து மாநில எல்லைகளை கடந்து ஒன்றுபட்டு நிற்கும் மகத்தான இயக்கமாக விவசாயிகளின் போராட்டம் பரிணமித்துள்ளது.

வேறு வழியின்றி யோக்கிய சிகாமணி வேடம் போட்ட மத்திய அரசு, பேச்சு வார்த்தைக்கு தயார் என்று கூறி விவசாய சங்க பிரதிநிதிகளை அழைத்தது. போராட்டத்தில் ஈடுபடாதவர்களையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்து, போராடுபவர்ளை பத்தோடு பதினொன்றாக ஆக்க முயற்சித்தது. போராடுபவர்களின் உண்மையான பிரதிநிதிகளால் , அந்த முயற்சிகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டது. வேறு வழியின்றி பதினோரு முறை ஐநூறுக்கும் மேற்பட்ட விவசாய அமைப்பின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. உண்மையில் பேச்சுவார்த்தை என்ற பெயரால் ஒரு நாடகத்தை நடத்தியது. பிரச்னையை தீர்க்க வேண்டுமென்ற அக்கறை மத்திய அரசுக்கு

இல்லையென்பதை தெரிந்துகொண்டாலும், தங்களுடைய கவலையை ஏதாவது ஒரு கட்டத்தில் மத்திய அரசு புரிந்துகொள்ளும் என்று விவசாய பிரதிநிதிகள் நம்பினார்கள்.

அதே நேரத்தில் தில்லியின் வெளிப்புறத்தில் சுமார் 30 முதல் 50 கி.மீ வரை ஐந்து முனைகளிலும் பரவி போராட்டத்தில் ஈடுபட்டதோடு, நாடு முழுவதும் பல்வேறு வடிவங்களில் போராட்டத்தை தீவிரப்படுத்தினார்கள். முதலில் பஞ்சாப் விவசாயிகள் மட்டுமே அதிலும் பணக்கார விவசாயிகளே போராடுவதாக கூறி போராட்டத்தின் பன்முக பரிமாணத்தை குறைக்க மத்திய அரசு முயன்றது. பஞ்சாப், அரியானா, உத்திரபிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் இருந்து வந்த விவசாயிகள் போராட்ட களங்களில் தாங்களும் இருப்பதை எடுத்துக்காட்டி அந்த பொய்யை தோலுரித்தார்கள். அதுமட்டுமல்ல விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஏழை விவசாயி, விவசாய தொழிலாளிகள், பெண்கள் என அனைவருமே போராட்டங்களில் பங்கேற்றிருப்பதை எடுத்துக்காட்டினர். தில்லியை சுற்றியுள்ள மாநிலங்கள் மட்டுமல்ல இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் போராட்டங்கள் பரவி பல்வேறு வடிவங்களில் நடந்து கொண்டுள்ளதையும், நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஏராளமான விவசாயிகள் வந்து தில்லி போராட்டத்தில் கலந்து கொண்டிருப்பதையும் ஊடகங்கள் வெளிச்சம் போட்டு அரசின் பித்தலாட்ட நடவடிக்கையை நகைப்புள்ளாக்கின! கிட்டத்தட்ட ஒரு நிரந்தர குடியிருப்பாகவே அந்த போராட்ட களங்கள் மாறிவிட்டன. தங்கள் கிராமத்தினர் போராட்டம் நடத்தும் போது தாங்கள் மட்டும் ஏன் இங்கிருப்பது என்று துணிவெளுப்போர், நாவிதர் என பலரும் சங்கமித்தனர். இந்த போராட்டத்தால் ஈர்க்கப்பட்ட ஏராளமான சமூக சேவையுள்ளம் கொண்ட இளைஞர்கள் நூலகம் அமைத்து வாசிப்பு பணி, இசை, நடனம், விளையாட்டு என பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர்.

## திசை திருப்ப முயன்ற நீதிமன்ற தலையீடு

போராடுபவர்களின் கோரிக்கை தெளிவானது. மூன்று வேளாண் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும், மின்சார சட்ட திருத்தங்களை திரும்ப பெறவேண்டும், அனைத்து வேளாண் பொருட்களுக்கும் குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயத்தை சட்ட பூர்வமாக்க வேண்டும், சூழலை மாசுபடுத்துவதாக கூறி விவசாயிகளுக்கு அபராதம் விதிக்கும் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்பதுதான். தொடக்கத்தில் மின்சார சட்ட திருத்தங்களையும், அபராதம் விதிக்கும் நடவடிக்கைகளையும் திரும்ப பெறுவதாக அரசு கூறினாலும், அதை அமுல்படுத்தாமல் எதிரான நடவடிக்கைகளையே எடுத்தது. சட்டத்தின் அம்சங்களை திருத்தம் செய்ய தயார், ஆனால் சட்டங்களை திரும்ப பெறும் பேச்சுக்கே இடமில்லை என்றது. குறைந்த பட்ச ஆதார விலைக்கு சட்டம் கொண்டுவர முடியாது என்று கூறி மறுத்துவிட்டது. ஆக மத்திய அரசின் இந்த பிடிவாத போக்கினால் , விவசாய அமைப்புகளுக்கு போராட்டத்தை தொடர்வதை தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத்தள்ளப்பட்டது.

இதனிடையே நீதிமன்றத்தில் போராட்டத்துக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் நீதிமன்றம் தானாக ஆஜராகி ஒரு கட்டை பஞ்சாயத்தை செய்தது. விவசாயிகளுக்கு ஆதரவளிப்பது போல் மூன்று வேளாண் சட்டங்களின் அமுலாக்கத்திற்கு தடை விதித்தும், அதே நேரத்தில் ஒரு குழு ஒன்றை அமைத்து அதில் நால்வரைப்போட்டு விவசாயிகளுடன் பேசி, தனது பரிந்துரையை தர உத்திரவிட்டது. போராடும் விவசாய அமைப்புகளை இந்த குழுவோடு பேசி தங்கள் நிலையை தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்திரவிட்டது. குழுவில் போடப்பட்ட நால்வருமே வேளாண் சட்டங்களை ஆதரித்து கருத்துகளை ஏற்கனவே வெளியிட்டவர்கள் என்பது மட்டுமல்ல, ஊடகங்களில் அதற்கு ஆதரவாக கட்டுரைகளும் எழுதியவர்கள் என்பதை விவசாய சங்க பிரதிநிதிகள் அம்பலப்படுத்தியதோடு, நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கையின் பின் மத்திய அரசின் கரங்கள் இருப்பதாகவும் ஐயமுற்றனர். இந்த நிலையில் குழுவில் ஒருவர் தான் இருப்பதற்கு மனசாட்சி இடம் கொடுக்கவில்லை என்று வெளியேறி விட்டார். ஆக குழுவும் சரி, அது கொடுக்கும் அறிக்கையும் சரி எப்படி இருக்கும் என்பது அப்போதே தெரிந்துவிட்டது.

இது குறித்த பாரதீய கிசான் சங்க பஞ்சாப் தலைவர் ஜோகீந்தர் சிங் உக்ரஹான் “ குழு அமைப்பதில் எந்த நம்பிக்கையும் இல்லை. ஏற்கனவே சுவாமிநாதன் குழு சொன்ன சிபாரிசான உற்பத்தி விலை நிர்ணயம் சி2+50 என்பதையே மோடி அரசு அமுல்படுத்தவில்லை. ஆகவே எந்த குழுவையும் தாங்கள் ஏற்க மாட்டோம்” என்கிறார். விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தாங்கள் நீதிமன்றத்திடம் செல்லவில்லை, எனவே அது அமைத்த குழுவிடம்

நாங்கள் பேச வேண்டிய அவசியமுமில்லை என்று கூறிவிட்டனர். மேலும் பிரச்னை மத்திய அரசுக்கும் போராடும் விவசாய அமைப்புகளுக்கும் இடையேதான். எனவே நீதிமன்றத்தின் தலையீட்டை நாங்கள் ஏற்கவில்லை என்று அறிவித்து விட்டனர்.

நீதிமன்றம் மூலம் தாங்கள் நினைத்தது நடக்கவில்லையென்பதை புரிந்துகொண்ட மத்திய அரசு பேச்சுவார்த்தையில் சில முன்மொழிவுகளை முன்வைத்தது. 18 மாதங்களுக்கு வேளாண் சட்டங்களின் அமுலாக்கத்தை நிறுத்தி வைக்கவும், இதனிடையே குழு அமைத்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயற்சிக்கலாம் என்றும் கூறியது. இதனை பரிசீலித்த விவசாய சங்க கூட்டமைப்பின் தலைவர்கள் சட்டத்தின் முன் இந்த உறுதிமொழிகள் நிற்காது என்பதை அறிந்து நிராகரித்து விட்டனர். நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டத்தை நாடாளுமன்றம்தான் நிறுத்தி வைக்க முடியுமே தவிர மந்திரி சபைக்கு நிறைவேற்றிய சட்டத்தை நிறுத்தி வைக்க அதிகாரமில்லை என்பதை கூறி அரசின் முன்மொழிவுகள் ஏமாற்றவே என்பதை தெரிவித்தனர். ஆர்எஸ்எஸ் சார்ந்த விவசாய அமைப்பு தெளிவாக கூறுகிறது. மத்தியரசின் இந்த திட்டம் எப்படியாவது விவசாயிகளை போராட்டகளத்திலிருந்து வெளியேற்றுவதை நோக்கமாக கொண்டது. அவ்வாறு அவர்களை அகற்றிய பின் சட்டத்தை படிப்படியாக பின்னர் அமுல்படுத்திக்கொள்ளலாம் என்று மத்திய அரசு திட்டமிடுகிறது என்பதை அம்பலப்படுத்தியது! போராடும் விவசாயிகள் மோடியரசின் இந்த தந்திரத்தை அறியாதவர்கள் அல்ல!

## மத்திய அரசும், காவல்துறையும் கட்டவிழ்த்த வன்முறை

பேச்சுவார்த்தை நாடகத்தை புரிந்துகொண்ட விவசாய சங்க தலைவர்கள் , ஜனவரி 26 குடியரசு நாளன்று போராடும் விவசாய சங்கத்தின் சார்பாக டிராக்டர்கள் பேரணி தில்லியில் நடைபெறும் என்று அறிவித்தார்கள். அதே சமயம் அரசு நடத்தும் விழாவுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்த மாட்டோம். அரசு விழா முடிந்தவுடன் டிராக்டர்கள் பேரணி நடைபெறும் என்றும் அறிவித்தனர். தில்லி காவல்துறை அனுமதி தர மறுத்தது. அனுமதி மறுத்தாலும் டிராக்டர் பேரணி நடத்துவதை தடுக்க முடியாது என்று தலைவர்கள் அறிவித்தனர். தில்லி காவல்துறை நீதிமன்றத்தை நாடியது. நீதிமன்றமோ சட்டம் ஒழுங்கு காவல்துறையின் பொறுப்பு என்று தலையிட மறுத்துவிட்டது. வேறு வழியின்றி காவல்துறை விவசாய சங்க தலைவர்களை அழைத்து பேசி நிபந்தனைகளுடன் டிராக்டர் பேரணி நடத்த அனுமதித்தது. காலை 11 மணிக்கு மேல் துவங்க வேண்டும் என்று கூறி போக வேண்டிய வழியை நிர்ணயித்தது. அநேகமாக டிராக்டர் பேரணிக்கும் அரசு நடத்துகிற விழாவுக்குமான இடைவெளி மிக நீண்டதாக இருந்தது. எனினும் விவசாய சங்க தலைவர்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டனர். பேரணியில் செல்வோர்க்கு எதை செய்ய வேண்டும்,எதை செய்யக்கூடாது என்று கையேடு கொடுத்து கட்டுப்பாட்டுடன் பேரணியை நடத்தி முடிக்க அனைத்து ஏற்பாடும் செய்தனர்.

ஆனால் மோடி அரசின் ஏவலாட்கள் காவல்துறை உதவியுடன் பேரணியை சீர்குலைக்க வகுத்த திட்டம் விவசாயிகள் அறிந்திருக்கவில்லை. கிட்டத்தட்ட இரண்டு லட்சம் டிராக்டர்கள் ஐந்து முனையான சிங்கு,பால்வால், காஜிப்பூர், திக்ரி, ஷாஜஹான்பூர் ஆகிய இடங்களில் இருந்து கிளம்பியது. விவசாயிகளுக்கு தில்லி காவல்துறை நிர்ணயித்து கொடுத்த வழி, தில்லிக்கு புதியவர்கள் என்பதால் தெரியாது. எனவே அவர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு தில்லி காவல்துறையின் கடமையாகும். இந்த நிலையில் அனுமதி தராத மத்திய தில்லியில் அதுவும் செங்கோட்டை பகுதியில் விவசாயிகள் என்ற பெயரால் ஒரு கூட்டமும், டிராக்டர்களும் எப்படி சென்றது எப்படி என்பது விவசாய சங்க தலைவர்களுக்கு தெரியவில்லை. மற்ற இடங்களில் இருந்து காவல்துறை சொன்னபடி டிராக்டர் பேரணி தொடங்கி நடந்து கொண்டிருந்த வேளையில், அவர்களை தில்லிவாசிகள் பூக்களைத்தூவி வரவேற்றுக்கொண்டிருந்த வேளையில் செங்கோட்டை பக்கம் சிலர் போக அவர்களை வழிநடத்தியது, போராட்டத்தில் இடையே வந்த பாஜக ஆதரவு அமைப்பு என்பது பின்னரே தெரிந்தது. அப்படி சென்றவர்கள் பேரணியில் கலந்துகொண்டவர்களில் நூற்றில் 0.1 சதமே!

அனுமதித்த வழிகளிலேயே தடைகளை உருவாக்கிய தில்லி காவல்துறை, அனுமதிக்காத செங்கோட்டை பகுதிக்கு எப்படி விவசாயிகளை அனுமதித்தது என்பது மட்டுமல்ல, பலத்த காவல் போடப்பட்டுள்ள செங்கோட்டைப்பகுதியில் எவ்வாறு விவசாயிகளையும் டிராக்டர்களையும் காவல்துறை அனுமதித்தது என்பதும் இன்றளவும் விவசாய சங்க தலைவர்கள் எழுப்பும் கேள்விகளாகும். அது மட்டுமல்ல செங்கோட்டையில் தேசியக்கொடிக்கு பக்கத்தில் ஒரு

மதத்தின் கொடியை நடிகர் தீப்சித்து என்பவர் ஏற்றியதும், அவர் பிரபல நடிகரும் பஞ்சாப் மாநில பாஜக எம்பியுமான சன்னி தியோலுக்கு நெருங்கிய நண்பர் என்பதும் மோடியுடன் அவர் எடுத்துக்கொண்ட படம் உட்பட செய்திகள் பின்னர் வெளியானது. விவசாயிகளை திசை திருப்பும் பணியில் போராட்டத்தில் இடையிலே வந்த ஒரு அமைப்பு (பாஜக ஆதரவு) ஈடுபட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. அனுமதித்த இடத்திலேயே பல தடைகளை உருவாக்கிய காவல்துறை பாதுகாப்பு மிகுந்த செங்கோட்டையில் தவறாக வழி காட்டப்பட்ட விவசாயிகளையும் டிராக்டர்களையும் திட்டமிட்டே அனுமதித்தது மட்டுமல்ல, கோட்டையின் உச்சியிலேறி கொடிகளை ஏற்றியதையும் எப்படி காவல்துறை வேடிக்கை பார்த்தது? எனவே டிராக்டர் பேரணியை சீர்குலைக்க மோடி அரசே காவல்துறை உதவியுடன் அரங்கேற்றிய சதியாகும் என்பதில் எந்த ஐயமுமில்லை?

கொடியேற்றும் வரை வேடிக்கை பார்த்த காவல்துறை அதன்பின் தனது கோர தாண்டவத்தை விவசாயிகள் மீது நிகழ்த்தியது. விவசாயிகள் மீது சகட்டுமேனிக்கு தடியடி நடத்தி கண்ணீர் புகை குண்டுகளை வீசி அரசின் அடக்குமுறையை அரங்கேற்றியது? ஏற்கனவே தற்கொலை செய்துகொண்ட 13 பேர் உட்பட 233 விவசாயிகளை பலி கொடுத்திருந்த விவசாய அமைப்புகள், காவல்துறையின் கண்மூடி தாக்குதல் காரணமாக டிராக்டர் கவிழ்ந்து சிக்கியதில் ஒருவரையும் இழந்தது. 112 விவசாயிகள் கைது செய்யப்பட்டு போடப்பட்ட 44 வழக்குகளில் 14 வழக்குகள் விவசாயிகள் மீதே போடப்பட்டது. இன்று வரை 16 விவசாயிகள் காணாமல் போயுள்ளனர். மோடி அரசின் அராஜகம் இத்துடன் நின்றபாடில்லை? மக்கள் நலனுக்காக போராட வந்த விவசாயிகளை தேசதுரோகிகள் என்ற முத்திரை குத்தி நாடு முழுவதும் வன்முறையாளர்கள் என்றும் தேசீயக்கொடியை அவமதித்தவர்கள் என்றும் பொய்ச்செய்தியை தனது ஊதுகுழல் ஊடகங்கள் மூலம் பரப்பியது.

இதை அறிந்த விவசாயிகள் காவல்துறை யின் கொடூர தாக்குதல் தொடரலாம் என்ற நினைப்பிலும், வன்முறைக்கு தாங்களும் உடந்தையாக இருக்கக்கூடாது என்று கருதியும் முகாமிலிருந்த வெளியேற ஆரம்பித்தனர். இதை பயன்படுத்தி உ.பி அரசு காவல்துறையை குவித்து விவசாயிகள் தங்கியிருந்த டெண்டுகளை பிடுங்கி எறிந்தது? தண்ணீர்,மின்சார வினியோகத்தை துண்டித்தது. இயற்கை உபாதைகளுக்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டை அழித்தது. தொலைத்தொடர்பை துண்டித்தது? கூடாரத்திலிருந்து வெளியேறுமாறு விவசாயிகளை மிரட்டியது. காவல் துறை குவிப்பால் அச்சமடைந்த விவசாயிகள் மத்தியில் விவசாய சங்க கூட்டமைப்பின் தலைவர் ராகேஷ் திகாயத் கண்ணீர் மல்க உரையாற்றினார். வன்முறைக்கு தாங்கள் காரணமில்லை என்பதோடு, இது ஆளுங்கட்சியினர் தூண்டிவிடப்பட்டதால் ஏற்பட்ட வன்முறை என்று விளக்கினார்.கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவுக்கு ஆதரவாக தனது அமைப்பினரை வாக்களிக்க வைத்து நாட்டு மக்களுக்கு துரோகம் செய்துவிட்டோம் என்று வருந்தினார்! அவர் பேசிக்கொண்டிருந்த போதே ஏராளமான காவல் துறையினர் குவிக்கப்பட்டு எந்த நேரத்திலும் அங்கே கலவரம் வெடிக்கலாம் என்ற சூழல் உருவானது. பாஜக எம்எல்ஏ தலைமையில் வந்த கூட்டம் வன்முறையில் ஈடுபடும் நிலை இருந்தது. இதையெல்லாம் காவல்துறை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தது. நிலைமையின் தீவிரத்தை புரிந்து கொண்ட விவசாய கூட்டமைப்பின் தலைவர் திகாயத் உயிரே போனாலும் இந்த இடத்தை விட்டு அகலமாட்டேன் என்று உறுதியான குரலில் பேசி விவசாயிகளுக்கு தைரியம் கொடுத்தார். ஊடகங்கள் ஒளிபரப்பிய இந்த காட்சி அவர் சங்கம் வலுவாக உள்ள மேற்கு உ.பி யில் உள்ள ஜாட் விவசாயிகளை உலுக்கி உடனே, அவர் இருந்த காஜியாபூர் நோக்கி வரவழைத்தது.

கலவரத்தை ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் போராட்டத்தை பலவீனப்படுத்தி விடலாம் என்று நினைத்த மோடி அரசுக்கும், காவல்துறைக்கும் பழையபடி விவசாயிகள் எல்லா முனைகளிலும் முன்னை விட திரள ஆரம்பித்ததை எதிர்பார்க்கவில்லை. வேறு வழியின்றி அவர்களே கலைந்து போயினர். இந்த நிலை காஜியாபாத் முனையில் மட்டுமல்ல அனைத்து முனைகளிலும் விவசாயிகள் திரண்டு வந்து அரசின் சதியை முறியடித்தனர். அத்துடன் தாங்கள் வன்முறையாளர்கள் அல்ல என்பதையும் நிரூபித்தனர். சதியின் பல விவரங்களை செய்தியாளர்கள் வெளிக்கொண்டு வந்தனர். தொலைக்காட்சிகளில் வந்த காட்சிகளும் சதியை மெய்ப்பிப்பதாக இருந்தன. இதனால் கேவலப்பட்ட மோடி, அமித்ஷாவின் மத்திய அரசு வெறித்தனமாக, உண்மைகளை வெளிப்படுத்திய பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் நிருபர்கள் மீது

ராஜதுரோகம் உட்பட பல தீவிர குற்றச்சாட்டுகள் சுமத்தி பொய் வழக்குகள் போட்டது. விவசாய சங்க தலைவர்கள் மீது பிடி வாரண்ட் பிறப்பித்தது. அவர்கள் ஏதோ மிகப்பெரிய கிரிமினல்கள் போல காட்டி அவர்களின் பாஸ்போர்ட்டை முடக்கியது. தன் ஊதுகுழல் ஊடகங்கள் மூலம் பொய்களை பரப்பியது. அவர்கள் மகாத்மா காந்தி கூறிய வார்த்தைகளையே பதிலாக கூறினர்! காந்தி கூறினார்'' நீங்கள் சொல்லும் கருத்து உண்மை என்றால், சமுதாயத்திற்கு உதவும் என்றால் அதை சொல்வதற்காக சட்டம் குறுக்கே நின்றாலும் பாதிப்பு வருவதாக இருந்தாலும் உரத்து சொல்லுங்கள்'' என்றார். போராடும் விவசாயிகளின் ஒற்றுமையும் , அவர்கள் கடைப்பிடித்த அறவழி அமைதி போராட்டமும் மோடி அரசின் சதியை முறியடித்து சாதனை படைத்தது.

## தடையரண்களில் ஆணிமுள்ளில் மலர்ந்த ரோஜாக்கள்

இதன் பின்னும் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த தாங்கள் தயாராக உள்ளதாகவும், ஒரு தொலைபேசி அழைப்பு கொடுத்தால் பேச தயார் என்று பிரதமர் மோடி மக்களை ஏமாற்ற ஜால வித்தைகளில் ஈடுபட்டார். அப்படி கூறிக்கொண்டே போராடும் விவசாயிகள் தில்லி நோக்கி நகராதபடி பெரும் தடுப்பரண்களை மோடி அரசு உருவாக்கியது. பெரும் கான்கீரீட் சுவர்களினால் தடைகளை ஏற்படுத்தியதோடு , இடையே பல அடி தூரத்திற்கு ஆயிரக்கணக்கான கூராணிகள் என ஏதோ பகை நாட்டினருக்கு எதிரான நடவடிக்கைகள் எடுப்பது போல் விவசாயிகளுக்கு எதிராக எடுத்தனர். ஆனால் விவசாயிகளோ அரசின் அடக்குமுறை ஆயுதங்களான தடையரண்களில் ரோஜாக்களை நட்டு தங்கள் அகிம்சா வழியை வெளிப்படுத்தினர். இப்படித்தான் ஒரு கையில் வன்முறையையும், மறுகையில் சமாதானத்தையும் ஏந்தி நின்ற மோடி அரசு பேச்சு வார்த்தைக்கு வாருங்கள் என்று கபட நாடகம் நடத்தியது?

உண்மையிலேயே விவசாயிகள் மீது அக்கறை இருக்குமானால் விவசாயிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், பொய் வழக்குகளையும் திரும்ப பெறுங்கள், நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருகிறோம் என்று விவசாய சங்க கூட்டமைப்பு தலைவர்கள் கூறினர். ஆனால் அது குறித்து மத்திய அரசு வாய் திறக்கவே இல்லை? ஆகவே பேச்சு வார்த்தையும் நடக்கவில்லை. ஜனவரி 26 அன்று விவசாயிகள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறை கலவரங்களை விசாரித்து உண்மை அறிய வேண்டும் என்ற கோரிக்கையை போராடும் விவசாய சங்கங்கள் முன்வைத்தன. தங்கள் கோரிக்கைகள் நிறைவேறாமல் போராட்டத்தை கைவிடும் பேச்சே இல்லை என்று அவர்கள் அறிவித்துவிட்டனர். இந்த வருடம் அக்டோபர் வரை இந்த போராட்ட வடிவம் தொடரும் என்றும், அதன் பின்னும் கோரிக்கைகள் நிறைவேறவில்லையென்றால் வேறுவடிவத்தில் இதை தொடர்வது குறித்து யோசிக்கப்படும் என்று கூறி தங்கள் போராட்ட உறுதியை வெளிப்படுத்தியுள்ளனர். இதனிடையே மாநில அளவில் பல்வேறு வடிவங்களில் மறியல், உண்ணாவிரதம் என போராட்டம் நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாய சங்க தலைவரை கொல்ல காலிஸ்தான் தீவிரவாத இயக்கம் ஊடுருவி இருப்பதாக மத்திய அரசின் உளவுத்துறை கூறுகிறது. எனினும் எந்த தடை வந்தாலும் அதை சந்தித்து முன்னேற விவசாய இயக்கங்கள் உறுதி பூண்டுள்ளன.

மார்க்சிஸ்ட் கட்சி கூறுகிறது'' இது உலக பெருமுதலாளிகளின் கூட்டோடு இந்திய பெருமுதலாளிகள் ஒரு புறமும், பணக்கார விவசாயிகள், மத்தியதர, ஏழை விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் என அனைத்து பரந்துபட்ட எளிய மக்கள் இன்னொரு புறமுமாக நின்று நடத்தும் யுத்தம். முதலாளித்துவ நிலபிரபுத்துவ அரசுக்கெதிராக தொழிலாளி வர்க்கம் விவசாயிகளோடு இணைந்து வர்க்கப்போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும் ''என்று தொழிலாளி வர்க்கத்தின் கடமையை நினைகூட்டியது. தொழிலாளிவர்க்கம் தன் வரலாற்று கடமையை நிறைவேற்றும் அரிய வாய்ப்பு இது என்பதை நடப்பியல் உண்மை தெளிவாக உணர்த்துகிறது. அம்பானி, அதானி கூட்டத்தின் ஏவலாளாக மோடி அரசு உள்ளதை விவசாயிகளின் கோரிக்கையை எக்காரணங்கொண்டு ஏற்க மாட்டோம் என்றும் பிடிவாதமாக மூன்று வேளாண் சட்டங்களையும், மின்திருத்த சட்டத்தையும் ரத்து செய்ய மாட்டோம் என்று கூறுவதிலும் தொழிலாளி வர்க்க சட்டங்களனைத்தையும் சேர்த்து மூன்று தொகுப்பாக்கி, தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக இருப்பதிலும் இருந்தே அதன் முதலாளி வர்க்க பாசம் தெரிகிறது?

இந்நிலையில் மின்சார தொழிலாளர்களாகிய நம் பொறுப்பு கூடுதலாகிறது. ஏற்கனவே தலையில் தொங்கியிருந்த கத்தி, இப்போது கழுத்தருகே திருத்தங்களாக நிற்கிறது. எனவே ஒன்றிணைவோம்! களம் காணுவோம்!!

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு




தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் கடந்த 2021 பிப்ரவரி 27,28-ல் சேலத்தில் மத்திய அமைப்பின் மாநிலத் தலைவர் தோழர் தி.ஜெயசங்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய அமைப்பின் மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர் மல்லிகார்ஜுனன், அணைக்கட்டு தொழிலாளர் சங்கத்தின் தலைவர்களில் ஒருவரான தோழர் ஆண்டம்மாள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் தா.பாண்டியன், சிஐடியுவின் மூத்த தலைவர் A.G. காசிநாதன் அவர்கள் மறைவிற்கும், மத்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கெதிராக நடைபெற்ற போராட்டத்தில் இன்னுயிரை ஈந்த போராளிகளுக்கும், மின்வாரியத்தில் இறந்த தோழர்களுக்கும், விருதுநகர் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் உயிர் இழந்த தொழிலாளர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைவர் தனது உரையில் மத்திய அரசின் மோசடியான நடவடிக்கை, மின்வாரியத்தின் நிலை, விவசாயிகள் போராட்டம், ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை பறிப்பு, தொழிற்சங்க அங்கீகார தேர்தலின் விளக்கங்கள் மற்றும் கேங்மேன் தொடர்பான விஷயங்களோடு தலைமையுரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து சிஐடியுவின் தமிழ் மாநிலக்குழுவின் துணைத் தலைவர் ஆர். சிங்ககாரவேலு துவக்க உரையாற்றினார். தனது துவக்க உரையில் உலகத்தொழிலாளர்கள் நிலையும், மத்திய அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கையும், அதனால் ஏற்படும் தொழில் பாதிப்புகளையும், பறிபோகும் தொழிலாளர் நலன் பற்றியும் எடுத்துரைத்தார்.

அதனையடுத்து மத்திய அமைப்பின் மாநில பொதுச்செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்தின் அவர்கள் மத்திய பி.ஜே.பி. அரசு பொதுத்துறைகளை நாசமாக்கும் நடவடிக்கைகளையும், மின்சாரத் துறையை மின்சார சட்டதிருத்த மசோதா 2021-ன் மூலம் தனியாரிடம் தாரைவார்க்கும் நடவடிக்கை, மின்வாரிய பிரிப்பு, நவம்பர் 4 தர்ணா இயக்கம், நவம்பர் 26 வேலை நிறுத்தம், டிசம்பர் 21 காத்திருப்பு போராட்டம், 2021 பிப்ரவரி 3 வேலை நிறுத்தம், 2020 மற்றும் 2021 உறுப்பினர் பதிவு, கிளைப்பேரவைகள், தணிக்கை, ஒப்பந்த ஊழியர், பகுதிநேர ஊழியர். நிரந்தரம், கேட்டகிரி குழுக்கள் உழைக்கும் பெண்கள், பொறியாளர் அமைப்பு, மற்றும் கேங்மேன் பதவி - நியமனம் அந்த தோழர்களை உறுப்பினராக்க வேண்டிய அவசியம் ஆகியவற்றைப்பற்றி எடுத்துரைத்தார்.

பின்னர் மத்திய அமைப்பு, மின்கதிர் வரவு- செலவுகளை தோழர் எம்.வெங்கடேசன் பொருளாளர் முன்வைத்தார். குடும்ப நல பாதுகாப்பு திட்ட வரவு- செலவை கணக்கை பொருளாளர் தோழர் பரந்தாமன் முன் வைத்தார்.

பொதுச்செயலாளரின் அறிக்கையின் மீது 40 தோழர்கள் விவாதித்தனர். 2-ம் நாள் தோழர் ஜி.சுகுமாறன் பொதுச்செயலாளர் சிஐடியு, அவர்கள் இன்றைக்கு தொழிலாளர்கள் சந்தித்து வரும் பிரச்சனை நாம் அவர்களை திரட்ட வேண்டிய அவசியம், கேங்மேன் பிரச்சனை அதில் நமது பணிகள் குறித்து பேசினார்கள்.

தோழர் எம். வெங்கடேசன் பொருளாளர் வரவு செலவு விபரக்கணக்கில் வந்த சந்தேகங்களுக்கு பதில் அளித்தார்.

அடுத்த மத்திய அமைப்பின் மாநில பொதுச்செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் அவர்கள் விவாதத்தில் வந்த கருத்துக்களுக்கு பதிலளித்து தொகுப்புரையாற்றினார்.

இந்த செயற்குழுவை சிறப்பாக நடத்திய ஈரோடு மண்டலத்திற்கு மத்திய அமைப்பின் செயற்குழு சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

## செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள்

1. ஒப்பந்த ஊழியர்களுக்கு தினக்கூலி ரூ.380/-யை மின் வாரியமே நேரிடையாக வழங்கி கோரி 2021 மே மாத இறுதியில் வலுவான சக்திமிக்க போராட்டத்தை நடத்துவது.
2. கேங்மேன் பதவியில் சேர்பவர்களை கிளைகள் ஸ்தாபனப்படுத்துவதிலும், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வதற்கும் கிளைத்தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கிளை நிர்வாகிகள் ஆகியோர் ஒருவார கால விடுப்பெடுத்து பணியாற்றுவது, மத்திய அமைப்பு மாநில நிர்வாகிகள் தொடர்ந்து உதவிகள் செய்திட வேண்டும்.
3. சிறப்பு பேரவைகளை நடத்தி கேங்மேன் பதவியில் சேர்ந்தவர்களுக்கு வழக்கு தொடுத்தவிபரம், தேர்வில் வெற்றி பெற்றவர்களின் வேண்டுகோளை தொடர்ந்து நமது சங்க கடிதம் மற்றும் வழக்கின் இடைக்கால தீர்ப்பு குறித்து விளக்க வேண்டும்.
4. 2020-ம் ஆண்டு சந்தாக்களை 2021 மார்ச் 10-க்குள் மாநில மையத்தில் ஒப்படைக்க வேண்டும்.
5. பகுதிநேர ஊழியர்கள் சம்மந்தமாக ஜுன் மாதத்தில் போராட்டம் நடத்துவது.
6. கேட்டகிரிக் குழுக்களை மின் வட்டக்கிளை வாரியாக அமைத்து செயல்படுத்துவது.
7. கணக்கீட்டுப் பணியாளர்களின் பஞ்சாயத்து காசோலை தொடர்பான பிரச்சனையை களைய நடவடிக்கை எடுக்கப்படும்.
8. ஓய்வு பெற்றோர் நல அமைப்பும், மின் ஊழியர் மத்திய அமைப்பும் இணைத்து பணியாற்றுவதோடு கிளைகள் தோறும் கருத்தரங்குளை நடத்தப்பட வேண்டும்.
9. சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாடப்படுகின்ற வகையில் மார்ச் -8 அன்று அனைத்து கிளைகளும் ஏதாவதொரு வகையில் நிகழ்ச்சிகளை கொண்டாடுவது.
10. தோழர் ஆர். செபாஸ்டியன் அவர்கள் மாநில துணை தலைவர் பொறுப்பை இராஜினாமா செய்ததை செயற்குழு ஏற்றுக்கொண்டது.
11. கேங்மேன் தோழர்களை ஸ்தாபனத்தில் இணைப்பது சம்மந்தமாக மாநில நிர்வாகிகளும், செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
12. எதிர்வரும் ஏப்ரல் 6-ல் நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற தேர்தலில் இடது சாரிகளின் பலத்தை அதிகரிக்க பாடுபடுவது.
13. கிளைகள் பேரவைகளையும், தணிக்கை களையும் உடனடியாக நடத்தி முடிக்க வேண்டும்.
14. பதவி உயர்வுகளில் வட்ட ஒதுக்கீடு செய்வதில் ஏற்படும் பிரச்சனைகளை உடனடியாக மாநில மையம் தலையீடு செய்து தீர்க்கப்பட வேண்டும்.






# அங்கீகாரம் – அதிகாரம் – பாதுகாப்பு என்ற முழக்கத்தோடு சர்வதேச பெண்கள் தினம்!

பெண்களின் உரிமைகளுக்காக போராடிய வீரவரலாறு தான் மார்ச் -8 சர்வதேச பெண்கள் தினம் பெடண் தொழிலாளர்களின் உரிமைக் காகவும், கண்ணியமான வாழ்விற்வாக வும், சமூக மாற்றத்திற்காகவும் தியாகம் செய்தாக பெண் தொழிலாளர்களின் வீரமிக்க போராட்ட உணர்வை உணர்த்தும் நாள் தான் மார்ச் -8 பெண்கள் தினம்.

மார்ச்-8 சர்வதேச பெண்கள் தினம் என்பது உலகம் முழுவதும் கொணடாடப்படுகிறது. அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் பெண்கள் தினம் கொண்டாடப்படுவது என்பது ஒரே மாதிரி புடவை அணிவது, அழகிப்போட்டி, நடனப்போட்டி, சமையல்போட்டி, பாட்டுப்போட்டி என கொண்டாட்ட தினமாக மாற்றப்பட்டுள்ளது.

பரந்துப்பட்ட பாட்டாளி வர்க்க மக்களை ஒன்று படுத்தும் முயற்சியில் ஆண் தொழிலாளர் மீது வைத்த அக்கறையை பெண் தொழிலாளர் மீதும் வைக்கவில்லை என்றால் அது பாட்டாளி வர்க்கம் தற்கொலை செய்து கொள்வதற்கு சமம் என்று மார்ச்-8 பெண்கள் தினத்தை போராடி பெற்றுத்தந்த தோழர் கிளாரா கூறியது இன்றும் அனைவரின் மனதிலும் பதிய வைக்க வேண்டிய வரிகளாகும்.

ஆரம்ப காலத்தில் அமெரிக்கா. ஐரோப்பா, நாடுகளில் ஆயிரக்கணக்கான பெண்கள் பஞ்சாலை, ஆயத்த ஆடை பணிகளில் உழைத்து வந்தனர். வேலை நேரம் என்பது 16 மணி நேரம், 12 மணி நேரம் என்று இருந்தது. தாமதமாக வேலைக்கு வந்தாலும், கழிவறையை அதிக நேரம் பயன்படுத்தினாலும் அபராதம் விதிக்கப்பட்டது. போதிய உணவோ, சுகாதார வசதிகளோ பெண் தொழிலாளர்களுக்கு கிடையாது.

ஆண் தொழிலாளர்களுக்கு இணையான ஊதியம் வேண்டும். தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை வேண்டும். வாக்குரிமை வேண்டும். 8 மணி நேர வேலை வேண்டும், பாதுகாப்பான பணியிடம் வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து 1910-ம் ஆண்டு மார்ச் 8 அன்று ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளிகள் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினர். பேரணி நடத்தினர். இந்த போராட்டம் பல நாட்கள் தொடர்ந்து நீடித்தது. உலகம் முழுவதும் உள்ள உழைக்கும் வர்க்க பெண்களை எழுச்சி கொள்ளச் செய்தது. இதுவே சர்வதேச பெண்கள் தினம் உருவாக வழி ஏற்படுத்தியது.

ஆயிரக்கணக்கான பெண்கள் பல நாட்கள் வீதிகளில் போராடி ரத்தம் சிந்தி பெற்ற தினமே பெண்கள் தினம், ஆனால் முதலாளித்துவ சமூகம் பெண்களின் உழைப்பை மலிவாகவும் எளிதாகவும் சுருண்டுகிறது. பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. கண்ணியம், சுயமரியாதை, விடுதலை, சமூக அங்கீகாரம் ஆகியவை மறுக்கப்படுகின்றன. பெண்கள் நவீன கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர்.

இளம் பெண் ஒருத்தி உடம்பு முழுக்க தங்க நகை அணிந்து கொண்டு எந்தவித அச்சமுமின்றி நள்ளிரவிலும் தனியாக வெளியே சென்று பத்திரமாக வீட்டுக்கு திரும்ப முடியும் என்ற நிலை என்று ஏற்படுகிறதோ அன்று தான் உண்மையான விடுதலை நாடு அடைந்ததாக

அர்த்தம் என்றார் மகாத்மா காந்தி அடிகள்.

ஆனால் இன்றைய சூழல் இளம் பெண்ணோ, நகையோ அல்ல எந்த வயதினரும் தெருவில் மட்டுமல்ல பள்ளி, கல்லூரி, கோவில், காவல் நிலையம், பஸ் நிலையம், ரயில் நிலையம், வீடு என்று எங்கும் வயது வித்தியாசமின்றி பாதுகாப்பு இல்லாத நிலையே தொடர்கிறது.

கல்விக்காகவும், வேலைக்காகவும் வீட்டை விட்டு வெளியில் வரும் பெண்களுக்கு பாதுகாப்பின்மை அன்றாடம் சந்திக்கும் பிரச்சனையாக உள்ளது. பெண்களின் போராட்ட உரிமை தினம் உருவாகி 110 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றும் உடை உடுத்துவதில் துவங்கி, பொது இடத்தில் எப்படி நடந்து கொள்வது என்று இன்று வரை பெண்களின் வாழ்க்கையை நிர்ணயிப்பதில் பெண்களின் கருத்தைவிட பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், உறவினர்கள், கருத்துக்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

அடிமைபோல் நடத்தப்படும் பஞ்சாலை தொழிலாளி, காய்கறி பூ விற்கும் சாலையோர தொழிலாளி, கால் சென்ட்ர்களில் இரவு-பகல் பாராது உழைக்கும் நவீன கொத்தடிமைகளாகவும், துணி கடைகள், பெட்ரோல் நிலையங்களில் கால்கடுக்க பணியாற்றும் ஏழை தொழிலாளிகள், மத்திய மாநில அரசுகளின் ஒப்பந்த கூலிகளாக வேலை செய்யும் பெண்கள் அனைவரின் உரிமைக்காகவும் மார்ச்-8 பெண்கள் தினத்தில் அணிதிரள வேண்டிய அவசியம் உள்ளது. உழைக்கும் பெண்களின் ஒருங்கிணைப்புக்குழு இன்றைய அவசர தேவையாக உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு முழக்கத்தை முன்வைத்து அகில இந்திய தொழிற்சங்க மையத்தின் வழிகாட்டுதலோடு மார்ச்-8 தினத்தை தமிழகத்தில் அனுஷ்டிப்போம், இந்த ஆண்டும் வேலையின்மை, வேலையிழப்பு, உணவிற்கு உத்தரவாதம், அரசியல் உரிமை, குடும்ப வன்முறை ஒழிப்பு, பாலியல் வன்முறை ஒழிப்பு. சட்ட மன்றத்திலும், பாராளுமன்றம் உட்பட தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளில் 35 சதவீத இடஒதுக்கீடு, வேலைக்கு அங்கீகாரம் ஓய்வூதியம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து உலக மகளிர் தினத்தில் பெண்கள் அணிதிரண்டு போராட வேண்டியுள்ளது.

உழைப்புக்கு அங்கீகாரம்

அரசியல் அதிகாரப் பங்கேற்பு

வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி என்ற முழக்கங்களோடு மார்ச்-8 சர்வதேச பெண்கள் தினத்தில் பணியிடம், பொதுவெளி, குடும்பம் என்ற மூன்று தளங்களிலும் உழைப்பு சுரண்டலுக்கும், சமத்துவமின்மைக்கும் எதிரான போராட உழைக்கும் பெண்கள் மார்ச்-85 சர்வதேச பெண்கள் தினத்தில் உறுதி ஏற்போம்.

**அனைவருக்கும் சர்வதேச பெண்கள் தின வாழ்த்துக்கள் !**

**எம்.தனலட்சுமி**
மாநில அமைப்பாளர்
உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு



வாழ்த்துக்கள்

தோழர் **கே. சுகுமாறன்,**

செயலாளர்/காடம்பாறை மின்திட்டக் கிளை
அவர்களுக்கு சிறப்பு நிலை முகவர் பதவி உயர்வு கிடைத்தமைக்காக...
நிர்மல் பற்றி நிதியாக ரூ.1000/-ம்
மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/-ம்
தீக்கதிர் வளர்ச்சி நிதியகா ரூ. 1000/ம் அளித்தார்.
தோழர் கே. சுகுமாறன் அவர்களுக்கு
ஆசிரியர் குழுவின் சார்பாக வாழ்த்துக்கள்



# இந்திய நாடாளுமன்றத்தில்.. நாட்டின் மின் துறையை சீரழிக்கும் மின்சார சட்ட திருத்த மசோதா 2021 தாக்கல்

எஸ்.எஸ்.எஸ்

இந்திய நாட்டின் மின் விநியோகத்தை கார்ப்பரேட் கம்பெனிகளின் காலடியில் சமர்பிக்க வகை செய்யும் மின்சார சட்ட திருத்த மசோதாவை சட்ட மாக்க 2014 முதல் முயற்சிகள் மேற்கொள்ள பட்டு வருகின்றன. அதன் உச்ச கட்ட முயற்சியாக சென்ற ஆண்டு மின்சார மசோதா 2014 என்பது 2020 என மாற்றப்பட்டு அதை சட்டமாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளபட்டன.

அதன் ஒரு அம்சமாக மின்சாரம் என்பது மத்திய மாநில அரசுகளின் பொது பட்டியலில் உள்ளதால் சட்ட திருத்தத்திற்கு மாநில அரசுகளின் கருத்து கேட்கும் நாடகத்தை நடத்தியது. கலந்து கொண்ட மாநிலங்களில் 13 க்கும் மேற்ப்பட்ட மாநிலங்கள் மத்திய அரசின் திருத்த ஆலோசணைகளை முற்றிலும் நிராகரித்தன.

அதனால் மின்சார சட்ட திருத்த மசோதா 2020 நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவில்லை.

இந்திய மின் விநியோகத்தை தனியாரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு செல்ல துடிக்கும் மத்தியில் ஆளும் பி. ஜே. பி. அரசு மின்சார சட்டம் 2020 இல் மேலும் சில கடுமையான சரத்துகளை சேர்த்து மின்சார சட்ட திருத்த மசோதா 2021 என்ற பெயரில் மாநில அரசுகளின் கருத்துகளை கூட கேட்காமல் அவசர அவசரமாக நாடாளுமன்ற மக்களவையில் வரிசை எண் 16 லும் மாநிலங்கள் அவையில் வரிசை எண் 29 லும் இடம் பெற செய்து சமர்பித்துள்ளது.

நாடாளுமன்ற கூட்டத் தொடர் ஜனவரி 29 ல் துவங்கி பிப்ரவரி 15 வரை முதல் அமர்வும் திரும்பவும் மார்ச் 8 ஆம் தேதி துவங்கி ஏப்ரல் 8 ஆம் தேதி வரை இரண்டாம் அமர்வு என இரண்டு அமர்வு களாக நடைபெற உள்ளதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது.

பி. ஜே. பி அரசை பொறுத்த வரையில் மசோதாக்கள் எவ்வாறு சட்டமாக்கப்படுகிறது என்பதற்கு விவசாயிகளின் வேளாண் மசோதா சட்டமானதே சாட்சி...

இந்த பின்னனியில் சமர்பித்துள்ள மின்சார சட்ட திருத்த மசோதா எந்த நேரத்திலும் சட்ட மாகலாம்....மின்சார மசோதாவில் இடம் பெற்ற அம்சங்களில் சில

மின்சார வினியோகம் என்பது மின்சார சட்டம் 2003 மூலம் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டாலும் இதுவரை கிராம புறம், நகர் புறம் வணிகப் பகுதி, தொழிற்சாலைகள் போன்றவை அனைத்தும் ஒரே கட்டமைப்பாக இருந்ததால் தனியார் முதலாளிகள் தாங்கள் நினைத்த கொள்ளை லாபத்தை அடைய முடியவில்லை. இதை மாற்றி மின் விநியோகத்தில் கொள்ளை லாபம் கிடைக்கும் பகுதிகளை தேர்ந்து எடுத்து தொழிலில் ஈடுபடும் வகையில் திருத்தங்கள் இடம் பெற்றுள்ளன.

மின்சார விநியோகம் என்பது அரசு சார்ந்த மின்விநியோக நிறுவனம் என ஏக போகமாக உள்ளதோடு மின்சார விநியோகத்தில் தனியார்

துணை உரிமையாளர் மூலம் மின்சாரத்தை வினியோகம் செய்யும் சரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

அதாவது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு (பகுதிக்கு) மாநில மின்சார வாரியம் மின்சாரத்தை விநியோகிக்கும் அதே இடம் பகுதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தனியார் நிறுவனங்களும் மின்சாரத்தை விநியோகிக்கும் என்ற சரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

அதாவது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு (பகுதிக்கு) மாநில மின்சார வாரியம் மின்சாரத்தை விநியோகிக்கும் அதே இடம்/பகுதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தனியார் நிறுவனங்களும் மின்சாரத்தை விநியோகிக்கும் என்ற சரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

மின் நுகர்வோர்களுக்கு மின் வினியோகம் செய்ய விரும்பும் தனியார்/தனியார் நிறுவனங்கள் மைய ஒழுங்கு முறை ஆணையத்திடம் விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும் தமிழகத்தின் ஒரு மூலையில் மின் விநியோகிக்க வேண்டுமானாலும் டெல்லிக்கே மனு செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் மின்சாரம் உற்பத்தி செய்து விநியோகிக்க தகவல் தந்தாலே போதும் அனுமதி தேவையில்லை

தனியார்/தனியார் நிறுவனம் குறைந்தபட்சம் நகராட்சி, மாநகராட்சி வருவாய் மாவட்டம் மின் விநியோகத்திற்கு மனு செய்யலாம் ஒருவரோ அல்லது ஒரு நிறுவனமோ ஒன்றுக்கு மேற்பட்ட இடத்திற்கு மனு செய்யலாம். இதன் மூலம் கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்திய நாடு முழுவதும் மின் விநியோகத்திற்கு மனு செய்யலாம் அனுமதி பெறலாம் மின் விநியோகம் செய்யலாம் கொள்ளை லாபம் அடிக்கலாம்.

தனியார் மின் விநியோகிப்பாளர்கள் மின் வழங்கும் இடத்தையும் மின் நுகர்வோர்களையும் தேர்வு செய்யும் உரிமையும் அதேபோல் மின் நுகர்வோர்கள் மின் விநியோகிப்பாளர்களை தேர்வு செய்யும் உரிமை வழங்கும் சரத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த சரத்து சட்டமாக்கப்பட்டால் தனியார் மின்விநியோகிப்பாளர்கள் சற்று கூடுதல் மின் கட்டணத்தை செலுத்தும் கட்டண பாக்கி இல்லாமல் செலுத்தும் நகர்புற வணிக தொழிற்சாலை மின் நுகர்வோர்களையே தேர்வு செய்வார்கள் கிராமப்புற மின் நுகர்வோர்களையே வீட்டு மின் நுகர்வோர்களையே மானிய விலையில் மின்சாரத்தை பெறும் விவசாய குடிசை பகுதி மின் நுகர்வோர்களை பற்றி கவலை பட மாட்டார்கள்.

மின் வாரியங்களை பொறுத்த வரையில் வருவாய் ஈட்டக்கூடிய மின் நுகர்வோர்களை இழந்து அதனால் வருவாயையும் இழந்து கிராமப்புற மின் நுகர்வோர்கள் மானிய விலையில் மின்சாரத்தை பெறும் விவசாய குடிசை வீட்டு மின் நுகர்வோர்களுக்கு மின்சாரத்தை வழங்கும் நிறுவனமாக அதன் பணிகள் மிகவும் சுருங்கி நாடிநரம்பற்ற ரத்த ஓட்டம் இல்லாத சதைகள் அற்ற எலும்பு கூடுகளாக அரசு சார்ந்த மின் வாரியங்கள் மாற்றப்படும்.

மின் நுகர்வோருக்கு மின் வினியோகம் செய்யும் உரிமை பெற்ற தனியார்/தனியார் நிறுவனங்கள் மின் விநியோக கட்டமைப்புக்களான டிரான்ஸ்பார்மார்கள் துணை மின்நிலையங்கள் பில்லர்பாக்ஸ் மின்சாரத்தை கொண்டு செல்லும் சாதனங்களை பயன்படுத்தி மின் விநியோகம் செய்து அதற்கான கட்டணங்களை அவர்களே நிர்ணயம் செய்து மின் எரிப்பு கணக்கீடு பண வசூல் போன்றவைகளை செய்து கொள்ளை லாபம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது

அதாவது இரயில் பாதைகள் அரசுக்கு சொந்தமானது வழிகாட்டிகள் அரசுக்கு சொந்தமானது அதை பராமரிப்பதும் இயக்குவதும் அரசு ஊழியர்கள் இரயில் நிலையங்கள் அரசுக்கு சொந்தமானது அதை இயக்குவதும் பராமரிப்பதும் அரசு ஊழியர்கள் ஆனால் பகட்டான இரயில் பெட்டிகளை ஓட விட்டு அதீத கட்டணங்களை நிர்ணயித்து கொள்ளை லாபம் அடிப்பதே தனியார்கள்...

அதைப்போல சாலைகள் அரசுக்கு சொந்தமானது அதை பராமறிப்பது அரசு பேருந்துகள் அரசுக்கு சொந்தமானது அதை இயக்குவது கட்டணம் நிர்ணயம் செய்து கொள்ளை அடிப்பது தனியார் நிறுவனங்கள்...

இவைகளைப் போல மின் விநியோக கட்டமைப்பு அதை பராமறிப்பது அரசு விநியோக உரிமையை பெற்று கட்டண நிர்ணயம் செய்து கொள்ளை லாபம் அடிக்க போவது கார்ப்பரேட்டுகள் அதற்கு தேவையான சட்ட திருத்தத்தை செய்வது மோடி அரசு.

மின் விநியோகத்தில் தனியாரை

ஊக்குவிப்பது ஒரு குறிப்பிட்ட இடத்திற்க்கு மின் விநியோகம் செய்ய ஒருவருக்கும் மேற்பட்ட தனியாரை அனுமதிக்க அரசு கூறும் காரணம் விநியோகிப்பாளர்கள் மத்தியில் போட்டி வளருமாம் அதனால் குறைவான மின் கட்டணத்தில் மின் நுகர்வோர்களுக்கு மின்சாரம் கிடைக்குமாம். யாரிடம் கதை அளக்கின்னறார்கள்.

1 கிலோ மீட்டர் இடைவெளியில் நான்கு தனியார் பெட்ரோல் பங்க் இருப்பதாக கொண்டால் நான்கு பெட்ரோல் பங்குகளிலும் மாறுபட்ட விலையில பெட்ரோல் வழங்கப்படுகின்றது இல்லையே ஒரே விலையில் தானே விற்கப்படுகின்றது தகவல் பறிமாற்றம் முன்னேறி உள்ள நிலையில் நம் பக்கத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்து தானே வாழ்கிறோம்.

அரசு போட்டி கட்டணத்தில் மின் விநியோகம் என்ற வாதம் வைப்பது எல்லாம் உண்மைக்கு புறம்பானது. உண்மை என்னவென்றால் மின்சார சந்தை என்பது மிகவும் விரிந்த பரந்த சந்தை இதில் வியாபாரம் செய்வது என்பது குறுகிய காலத்தில் கோடி கணக்கான ரூபாயை கொள்ளை அடிக்க கார்ப்புரேட்டுகளுக்கு ஏதுவாகத் தான் அவசர அவசர மாக சட்ட திருத்த மசோதாவை சட்ட மாக்க துடிக்கிறது

முன் மொழிந்த உள்ள மசோதாவில் கார்ப்புரேட்டுக்கு உதவும் வகையில் மின் கொள் முதலில் பாக்கி வைத்துள்ள நிறுவனத்திற்கு மின்சாரம் வழங்குவதை உடனடியாக நிறுத்தும் அதிகாரத்தை மின் விநியோக மையத்திற்கு Main load despatch centre க்கு வழங்கப் பட்டுள்ளது.

கார்ப்பரேட் கம்பெனிகள் தங்களது வியாபாரத்தை விரிவுபடுத்தும் விதமாக அண்டை நாடுகளுக்கு மின்சார பரிவர்த்தனை செய்யவும் அதை ஒழுங்கு படுத்தும் அதிகாரத்தை மைய ஒழுங்கு முறை ஆணையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது தற்போதுள்ள மின் கட்டமைப்பை சீர்குலைத்து மின் விநியோகத்தை கார்ப்புரேட்டுகள் கொள்ளை காடாக மாற்றவே வழிவகுக்கும் முன்மொழிந்துள்ள மசோத சட்டமாக்கப்பட்டால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

சாதாரண மின் நுகர்வோர்கள் பாதிக்கப் படுவார்கள்.

தொழிலாளர்கள் தங்களது உரிமையை இழப்பார்கள்.

மாநில அரசு தனது அதிகாரத்தை இழக்கும்.

மாநில மின் வாரியங்கள் உயிரற்ற உடலாய் மாறும்.

அதிகாரம் மத்தியில் குவியும்.

மசோதாவின் மோசமான அம்சங்களை நாட்டின் பட்டி தொட்டிகளுக்கு கொண்டு செல்வோம் அனைவரையும் விழிப்படைய செய்வோம் அரசை போராட்ட களத்தில் சந்திக்க தயராவோம்.



## மணமக்களுக்கு வழ்த்துக்கள்

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் கோட்டத்தின் முன்னாள் செயலாளர் தோழர் எம். ராஜசேகரன் அவர்களின் மகன்

**மோகன்குமார ராஜா - ஷீலா குமாரி**

ஆகியோர் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திட்டத் தலைவர் எம். பீர்முகமதுஷா, மற்றும் செயற்குழு உறுப்பினர் டி. கந்தசாமி ஆகியோர் நேரில் சென்று மணமக்களை வாழ்த்திய போது மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500/-ஐ அளித்தனர்.

# அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 59-ல் இருந்து 60 ஆக உயர்த்தலாமா?

இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறிக்கின்ற வகையில் அடிமைகளின் அரசான அதிமுக அரசு, அரசு ஊழியர்கள் பணி ஓய்வு பெறும் வயதை 59-ல் இருந்து 60 வயதாக உயர்த்தியுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளாக தமிழகத்தை ஆண்ட அதிமுக ஆட்சியில் 4.5 லட்சம் அரசு பணி இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அரசு பொதுத்துறை நிறுவனங்களில், மின்சார வாரியம் உட்பட 3 லட்சம் காலிப்பணியிடங்கள் உள்ளன. மொத்தம் 7.5 லட்சத்திற்கு மேற்பட்ட காலிப் பணியிடங்களை நிரப்பிடாமல் தற்போது பணியாற்றும் ஊழியர்களுக்கு வயது வரம்பை உயர்த்திய செயல் மிகப்பெரிய மோசடித் தனமானதாகும்.

மத்திய, மாநில அரசுகள், அரசுத் துறைகளின் வேலை வாய்ப்பை, படித்த இளைஞர்களுக்கு வழங்காமல், அவர்களின் வறுமையை , வேலையின்மையை பயன்படுத்தி அவுட் சோர்சிங் முறையில் உழைப்புச் சுரண்டலை செய்து வருகிறது. பணி ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு ஓய்வு காலப் பணப்பயன்களை வழங்க முடியாமல், பணி ஓய்வு பெறும் வயதை நீட்டிப்பு செய்வது இந்த அரசின் கையிலாகாத தனத்தை உணர்த்துகிறது.

தேர்தல் காலம் நெருங்கி வருவதையடுத்து வெற்று அறிவிப்புகளை வெளியிட்டு அரசின் கஜானாவை காலியாக்கி விட்டு தமிழ்நாட்டில் வசிக்கும் ஒவ்வொருவர் மீதும் ரூ. 79,083/ கடன் சுமையை ஏற்றியது தான் அதிமுக அரசின் சாதனை.

அரசின் வேலை வாய்ப்புக்காக, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் வேலைக்கு பதிவு செய்து காத்திருக்கின்றனர். துப்புறவு பணிகளுக்கும், மின் வாரியத்தில் கேங்மேன் பதவிக்கும் முதுகலை பட்டம் பெற்றவர்களும், பொறியியல் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கும் அவலநிலை.

ஆண்டுக்கு 2 லட்சம் பேருக்கு வேலை தருவோம் என ஆட்சிக்கு வந்த அதிமுக அரசு வேலை வாய்ப்பு வழங்காமல், ஓய்வு பெறும் வயது வரம்பை நீட்டிப்பது, இளைஞர்களின் வேலை வாய்ப்பில் வயது வரம்பில் பணியில் சேர முடியாத நிலை உருவாக்கி விட்டது.

மின்சார வாரியம், அரசு போக்குவரத்து உள்ளிட்ட பொதுத்துறைகளில் பணியாற்றும் களப்பிரிவில் உள்ளவர்கள் 58-60 வயதுகளில் மாறிவரும் புறச்சூழலில் பணியாற்றுவது மிகுந்த சவாலான ஒன்றாகியுள்ளது. பணியாளர்கள் விருப்ப ஓய்வு அளிக்க துவங்கி விட்டார்கள். அவர்களது பணிகளையும், தற்போதுள்ள பணியாளர்களே செய்யும் அவல நிலை உருவாகும்.

புதியதாக தமிழகத்தில் பதவி ஏற்கும் அரசு இளைஞர்களின் கனவை நிறைவேற்றுமா! பொறுத்திருந்து பார்ப்போம்!!

- எஸ்.இராஜேந்திரன்



தொழிற் சங்கங்களை தொடர்ந்து அவமதிக்கும் போக்கை கண்டித்தும் CMD மற்றும் JMD இருவரையும் இடமாற்றம் செய்திட கோரி சென்னை மின்வாரிய தலைமையகம் முன்பு **அனைத்து தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம் 8.2.2021**

# மின்வாரியத்தில் நடைபெறும் தேர்வுகள் அனைத்தும் தமிழில் தேர்வு வினாக்கள் இருக்க வேண்டும் என்று வாரியத்திற்கு நாம் எழுதிய கடிதமும் நாம் எழுதிய கடிதத்திற்கு வாரியம் அளித்த பதிலும்

பெறுநர்

நாள்: 21.01.2021

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002

ஐயா,
வணக்கம்

பொருள் : தமிழ் ஆட்சி மொழி செயலாக்கம் - மின்வாரியம் தேர்வு வினாக்கள் தமிழில் வராதது - உரிய நடவடிக்கை எடுக்கக் கோருவது - தொடர்பாக

பார்வை : மின் வாரியத்தின் ஊழியர்களுக்கான கணக்கியல் தேர்வு 12.12.2020

மின்சார வாரியம் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பொதுத்துறை நிறுவனம். இதில் பணிபுரியும் பெரும்பாலான ஊழியர்கள், தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் ஆகியோர் தமிழகத்தை சேர்ந்தவர்கள். தமிழ் மொழியைத் தாய் மொழியாய் கொண்டவர்கள். மேலும் தமிழக அரசு அதன் நிறுவனங்களில் தமிழ் மொழியின் மூலமாக அனைத்து கடிதப்போக்குவரத்துகளும் இருக்க வேண்டுமென்றும், தமிழை ஆட்சி மொழியாக நிலை நிறுத்த வேண்டுமென்றும், அதற்கான அரசாணைகளை தமிழக அரசு அவ்வப்போது வெளியிட்டு வந்தது. அதை கவனத்தில் கொள்ளாமல் மின்சார வாரியம் தனது நிர்வாக கடிதப்போக்குவரத்து மற்றும் உத்திரவுகளை இன்று வரை ஆங்கில மொழியிலேயே பயன்படுத்தி வருகிறது. இதை தமிழில் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நிலையில் 12.12.2020 அன்று நடைபெற்ற மின்வாரிய ஊழியர்களுக்கான கணக்கியல் தேர்வு வினாத்தாள் தமிழில் அளிக்காமல் ஆங்கில மொழியில் அளிக்கப்பட்டிருந்தது. தமிழை தாய் மொழியாக கொண்ட தமிழ்நாட்டின் மின்வாரிய ஊழியர்களுக்கு இதற்கு முன்பாக ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியிலும் வினாத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது. மாநில அரசு ஆங்கில மொழியை தொடர்பு மொழியாகவும் தமிழை ஆட்சி மொழியாகவும் அறிவித்து 50 ஆண்டுகள் கடந்து விட்டது. ஆயினும் தொடர்பு மொழியான ஆங்கிலத்தை பிடித்துக் கொண்டு தாய்மொழியான தமிழுக்கு அங்கீகாரத்தை மின்வாரியம் அளிக்காதது மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. இந்த நிகழ்வானது தமிழக அரசு தமிழ் ஆட்சி மொழி ஆவதற்கு வெளியிட்ட அரசாணைக்கு எதிரானதாகும்.

எனவே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்கள் மின்வாரியத்தில் அனைத்து உத்தரவுகளும், கடிதப் போக்குவரத்துகளும் மற்றும் மின்வாரிய தேர்வுகள் அனைத்தும் தாய் மொழியான தமிழிலேயே வெளியிட வேண்டும் என்ற எங்களது கோரிக்கையை அமலாக்கம் செய்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

**நன்றி !**

தங்கள் உண்மையுள்ள

**(எஸ். இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்

பொது மேலாளார் /பயிற்சி மேம்பாட்டு
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
5வது தளம் சென்னை –2.

க. எண்.பொ.மே/ம.வ.மே/து.பொ.மே/உ.செ.பொ/உ.பொ/கோ.தே.பி/ அ.072/**2021**, நாள் .02.2021

பொருள்: மின்வாரிய தேர்வு வினாக்கள் தமிழில் வழங்காதது – குறித்து – விளக்கம் அளித்தல் தொடர்பாக

பார்வை: அலுவல் சாராக் குறிப்பு எண்.008659/48/ஜி.47/ஜி.471/2021–1, நாள்10.02.2021.

••••

தமிழ்நாடு மின் வாரியத்தில் துறை தேர்வு நவம்பர் 2013 ஆம் ஆண்டில் இருந்து நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வுகளில் வாரியத்தில் உள்ள அனைத்து நிலை பணியாளர்களும் தேர்வு எழுத அனுமதி அளிக்கப்பட்டு இருந்ததால் தேர்வு எழுதுபவர்களுக்கு ஏதுவாக தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வினாத்தாள் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால், தற்பொழுது மே–2020 துறை தேர்விற்கான CMD TANGEDCO Proceeding No.28 நாள் 18.02.2020–ன் படி துறைத்தேர்வு எழுதுவர்களுக்கான தகுதி குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, தகுதியானவர்கள் மட்டுமே துறைத்தேர்விற்கு அனுமதிக்கப்படுவதால், கேள்விகள் தமிழில் இருக்க தேவை இல்லை என்று வாரிய துறை தேர்வு கேள்விகள் தயாரிக்கும் குழு நபர்களால் முடிவு எடுக்கப்பட்டு, தேர்வுகள் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது. இருந்தபோதிலும், தேர்வு எழுதியவர்களிடம் இருந்து பெறப்பட்ட பின்னுட்டத்தின்படி இனி நடக்கவிருக்கும் மே–2021 துறை தேர்விற்கான கேள்விகள் ஆங்கிலம் மற்றும் தமிழிலும் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதனை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு,

பொது மேலாளர் / பயிற்சி மற்றும் மேம்பாடு

பெறுநர்
பொது செயலாளர்,
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு, (CITU& EEFI)
27, மசூதி தெரு, சேப்பாக்கம்,
சென்னை –005.

நகல்
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/ஆய்வு,
நிர்வாகக் கிளை,
144, அண்ணா சாலை,
சென்னை –2.

# விண்ணைமுட்டும் பெட்ரோல், டீசல், கேஸ்,விலை உயர்வு! இரக்கமில்லாத ஆட்சியாளர்கள்

பெட்ரோல், டீசல் விலை ஒரு புறம், சமையல் காஸ் சிலிண்டர் விலை மறுபுறம் என சாதாரண பாமர மக்களின் மீது தாக்குல் நடத்தி வருகிறது மோடி அரசு.

கொரானா காலத்தில் கடுமையாக வேலை வாய்ப்புகள் பாதிக்கப்பட்டு குடும்பங்களின் வாழ்க்கை தரம் சரிந்து, குடும்பத்தின் தலைவன் கடன் தொல்லையில் பாதிக்கப்பட்டு மொத்த குடும்பமே தற்கொலை செய்து கொள்ளும் நிலையை உருவாக்கி உள்ளனர்.

பெட்ரோல், டீசல் விலை அனுதினமும் உயர்ந்து வருவதை போல் சமையல் எரிவாயு உருளை மாதத்தில் இரண்டு முறை அல்லது மூன்று முறை உயர்ந்துள்ளது மக்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

மோடி அரசாங்கம் 2014 -ம் ஆண்டு ஆட்சிக்கு வரும் பொழுது வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.440/- கடந்த 2020 நவம்பர் மாதம் ரூ.610/- ஆக உயர்ந்துள்ளது. தற்போது மூன்று மாதங்கள் கழித்து ரூ. 865/-க்கு எரிவாயு உருளை கிடைக்கிறது. இது தான் வளர்ச்சி போலும்.

மண்ணெண்ணையை குறைத்து சிலிண்டர் பயன்பாட்டை அதிகரித்து விட்டு, கேஸ் விலையை உயர்த்தி வாக்களித்த மக்களுக்கு அவர்கள் மீது தொடுக்கப்பட்ட மிகக்கொடியத் தாக்குதல் அன்றோ! சாமான்ய மக்களின் மாத பட்ஜெட்டில் பெட்ரோல், எரிவாயு சிலிண்டர் காரணமாக மாதந்தோறும் ரூ. 3000/-க்கு குறையாமல் துண்டு விழுகிறது. இதனால் சாமான்ய மக்களும் கடன் வலையில் விழும் நிலை ஏற்படுகிறது.

2014-ல் பெட்ரோல் விலை ரூ.71.41/-பைசா, அப்பொழுது கச்சா எண்ணெய் ஒரு பேரல் 140 டாலர். தற்போது ஒரு பேரல் 60 டாலரைக் கூட எட்டவில்லை. ஆனால் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.93/- தாண்டி நிற்கிறது. மராட்டிய மாநிலத்தில் 1 லிட்டர் பெட்ரோல் விலை ரூ. 100/-ஐ எட்டி விட்டது.

பெட்ரோல் விலை 36 சதவீதம், மத்திய அரசின் வரி 37 சதவீதம், மாநில அரசின் வரி 23 சதவீதம். மத்திய, மாநில அரசுகள் கடந்த ஆறு ஆண்டுகளில் பெட்ரோல் மீது 26 சதவீத வரியை கூட்டியது, எந்த விதத்திலும் நியாயம் அல்ல.

பொதுத்துறைகளையும், இயற்கை வளங்களையும் அம்பானி, அதானி உள்ளிட்ட கார்ப்பரேட் முதலாளிகளுக்கு தாரைவார்க்க துடிக்கும் பிஜேபி அரசிடம் வேறு என்ன எதிர்ப்பார்க்க முடியும்.

வாக்களித்த மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்த திட்டமிடாமலும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காமலும், கல்வியையும், சுகாதாரத்தையும், ஏழை, எளிய மக்கள், எளிய முறையில் அனுபவிக்க முடியாத சூழலை உருவாக்கி உள்ளார்கள்.

இந்த விலை உயர்வினால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது இல்லத்தரசிகள் தான். ஏனெனில் வீட்டு பட்ஜெட்டில் துண்டு விழுகிறது அல்லவா!

கொலை வாளினை எடுடா!
மிகக் கொடியோர் செயல் அறவே!
என்றான் மகாகவி பாரதி
மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டமே!
ஆட்சியாளர்களின் எண்ணங்களுக்கு,
அடிக்கும் சாவு மணி!

**சிவகங்கை மின்வட்டக் கிளையின் சார்பில் மத்திய அமைப்பின் 50 ஆம்ஆண்டு பொன்விழா கல்வெட்டு மற்றும் சிறப்பு பேரவை 7.2.2021 அன்று நடைபெற்றது.**





# திருவள்ளூர் வட்ட அலுவலகம் துவக்குவதற்கு பதிலாக சென்னை மேற்கு மற்றும் தெற்கு II வட்டங்களை ஒழிக்கின்ற நடவடிக்கை எடுக்கக் கூடாது என வாரியத்திற்கு கடிதம்

நாள்: 04.02.2021

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002
ஐயா,

வணக்கம்

பொருள் : நிர்வாகம் - திருவள்ளூர் மின் வட்டம் அலுவலகம் அமைத்தல் - தொடர்பாக

திருவள்ளூர் மாவட்டத்தை தலைமையிடமாக கொண்டு, வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் அமைக்க தமிழக அரசின் அனுமதி அறிவிப்பை தொடர்ந்து மின்வாரிய நிர்வாகம் அதற்கான அனுமதியை அளித்து உத்திரவு பிறப்பித்தது.

ஆனால் ஆண்டுகள் கடந்த பின்பும் வாரிய நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது திருவள்ளூர் மின் பகிர்மான வட்டத்தை அமைக்க போவதாகவும், அவ்வாறு அமைகின்ற பொழுது ஏற்கனவே உள்ள சென்னை மேற்கு மற்றும் தென் தென்னை -2 ஆகிய இரு வட்ட அலுவலகங்களை ஒழிக்கப் போவதாகவும் தெரிய வருகிறது. இது தமிழக அரசின் உத்திரவிற்கு எதிரான தவறான நடவடிக்கை என சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மின் நுகர்வோர்களின் எண்ணிக்கை மற்றும் வருவாய், வட்ட அலுவலகத்திற்குள் வரும் பிரிவு அலுவலகங்களின் தொலைதூரம் ஆகியவற்றை கணக்கில் கொண்டு மின் நுகர்வோர் வசதிக்காகத்தான் விநியோக வட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அவ்வாறு அமைக்கப்படும் வட்டங்களில் வேலைப்பளு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பல பதவிகள் உள்ளது.

தொழிற்தகராறு சட்டம் 1947-ன்படி தொழிற்சங்கங்களை கலந்து ஆலோசிக்காமல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என தெரிவிப்பதோடு, வட்ட அலுவலகங்களை பிரித்து பதவிகளை உருவாக்குவதற்கு பதிலாக, பதவிகளை ஒழிக்கும் நடவடிக்கையை கைவிட கேட்டுக் கொள்கிறோம்.

எனவே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து, திருவள்ளூர் வட்டம் அமைவதற்கு நடவடிக்கை எடுக்க கோருவதோடு இருக்கும் வட்டங்களை ஒழிக்க கூடாது என கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ். இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்




தமிழகத்தின் சேவைத்துறையான மின்துறையில் இன்றைய நாளில் 52,000க்கும் மேற்பட்ட காலிப்பணி இடங்கள் இருந்து வருவது மிகவும் அதிர்ச்சி அளிக்கும் செய்தியாகும். படித்த, பட்டம், பட்டயம், பெற்ற இளைஞர்கள் அரசுத்துறையில் வேலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருப்பவர்களுக்கு இந்த காலிப்பணியிடங்களை நிரப்பாமல் இருப்பது ஏமாற்றத்தையே அளித்து வருகிறது.

இந்த காலிப்பணியிடங்களை நிரப்பாத காரணத்தால் கூடுதல் பணிச்சுமையோடு மின்வாரிய ஊழியர்கள் பணியாற்றி வருவது விபத்துக்களை அதிகரிப்பதுடன், கடுமையான மனஉளச்சலுக்கு தள்ளப்படும் அவலநிலை உருவாகிறது. நிரந்தர தன்மை வாய்ந்த இந்த பணிகளை அவுட் சோர்சிங் முறையில் விடுவதற்கான நடவடிக்கையும் எடுத்து வருகிறது தமிழக அரசும், மின்வாரியமும்.

மின்வாரியத்தின் இந்த நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி கடந்த 21.12.2020 அன்று நடைபெற்ற காத்திருப்பு போராட்டத்தின் விளைவாக மின்வாரியம் தனியார்மய ஆவதையும், அவுட் சோர்சிங் முறையையும் தடுத்தி நிறுத்தப்பட்டது.

தமிழக மின்வாரியத்தில் மக்களுக்கு நேரடியாக சேவை செய்யக்கூடிய 23,000 களஉதவியாளர் பதவிகளும், 8206 கம்பியாளர் பதவிகளும் 3380 கணக்கீட்டாளர் பதவிகளும், 1430 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளும்,1640 உதவி மின் பொறியாளர் பதவிகளும், 1000-த்திற்கும் மேற்பட்ட இளநிலை உதவியாளர் பதவிகள் என ஆரம்பக்கட்ட பதவிகள் 30,000-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களாக உள்ளது. இதற்கடுத்து பதவி உயர்வில் நிரப்பப்பட வேண்டிய 22,000 பதவிகளும் காலிப்பணி இடங்களாக உள்ளன.

மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை இயற்கை பேரிடர் காலத்தில் பணியாற்றும் போது விரைவில் பணி நிரந்தரம் படுத்துகிறோம் என்று கூறிய தமிழக அரசு தற்போது நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதியை உதறித் தள்ளுகிறது.

மின்வாரியத்தில் களஉதவியாளர்கள் செய்யும் பணியை கேங்மேன் என்ற புதிய பதவியை உருவாக்கி 5000 பேர்களை தேர்வு செய்து பணி நியமனம் செய்வதாக அரசும், மின்வாரியமும் அறிவித்து அதன் அடிப்படையில் 96,000-க்கும் மேற்பட்டவர்கள் இந்த போட்டித் தேர்வில் கலந்து கொண்டனர். அதில் 14954 பேர் தேர்வு செய்யப்பட்டதாக கூறிய வாரியம் 10,000 பேர்களை உடனடியாக நிரப்புவதாக அறிவித்தது. ஆனால் தொழிற்சங்கங்கள் தொடுத்த வழக்கின் அடிப்படையில் அனைத்து விதமான தேர்வுக்கான பணிகளையும் முடித்து வைத்த வாரியம் தற்போது நியமன உத்தரவிற்கு மட்டும் தொழிற்சங்கங்களின் வழக்கு தான் என்று காலம் தாழ்த்தி வருகிறது. உண்மை அதுவல்ல. கடந்த காலங்களில் ஆரம்ப கட்ட பதவிகள் நிரப்பிடும்

போது இது போன்ற வழக்குகள் வருகின்ற போது நீதிமன்றத்தில் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என பணி நியமன உத்தரவுகளை மின்வாரிய நிர்வாகம் வழங்கி உள்ளது. மின்வாரிய நிர்வாகத்திற்கும், தமிழக அரசுக்கும் உண்மையிலேயே கேங்மேன் பதவிகளை நிரப்பிட எண்ணம் இல்லை என்பது அவுட்சோர்சிங் முறைகளுக்கு மின்வாரிய நிர்வாகம் செல்வதிலிருந்தே தெரிகிறது.

600 உதவி பொறியாளர் 1300 கணக் கீட்டாளர் 500 தொழிற்நுட்ப உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் எழுத்துத் தேர்விற்காக காத்திருக்கிறார்கள். இதர கள உதவியாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு அறிவிக்கையோடு உள்ளது.

ஒரு முன் மாதிரியாக இருக்க வேண்டிய அரசின் பொதுத்துறை நிறுவனம் தனியார் மயத்தை நோக்கி செல்வதும் காலிப்பணி இடங்களை நிரப்புவதும், நிதி நெருக்கடியை காரணம் காட்டுவதும் மக்கள் சேவையை விரைவாக செய்ய முடியாத நிலைக்கு மின்வாரிய பணியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மின்வாரியத்தில் தற்போது ஏற்பட்டுள்ள காலிப்பணி இடங்களை நிரப்புவதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளி வர்க்கம் அமைதியாக இருக்காது. படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களை ஒன்று திரட்டி ஆட்சியாளர்களுக்கு எந்த மொழியில் புரிகிறதோ அந்த மொழியில் புரியவைப்போம்.

வேலை இல்லா பட்டாளமும்,

கூடுதல் சுமையுடன் வேலை செய்யும் பாட்டாளியும்,

இணைந்து நிற்போம்! எழுந்து நிற்போம்!!



வேளாண் சட்டங்கள்,
மின்சார சட்டம்
மற்றும் சட்ட
தொகுப்பு
நகல் எரிப்பு
போராட்டம் /தர்மபுரி
3.2.2021



வேளாண் சட்டங்கள், மின்சார சட்டம் மற்றும் சட்ட தொகுப்பு
நகல் எரிப்பு போராட்டம் /சென்னை 3.2.2021

# பகுதி நேர பணியாளர்களை நிரந்தரம் குறித்து வாரியத் தலைவருக்கு கடிதம்

நாள்: 15.02.2021

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : நிர்வாகம் - பகுதிநேர பணியாளர்கள் - நிரந்தரம் குறித்து

பார்வை : 1. (Per) CMD TANGEDCO Proceeding No.76, dated 09 November 2020

2. எங்களது கடித நாள் 12.11.2020

தமிழ்நாடு மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக சொற்ப கூலித்தொகையில் துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வந்தனர். இவர்களை நிரந்தரப்படுத்தி சத்துணவு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தை வழங்க கோரி உச்சநீதிமன்றம் வரை சென்று தீர்ப்பை பெற்றது எங்களது அமைப்பு.

அதன் பிறகு பல ஆண்டுகள் கழித்து மீண்டும் தொடர்ந்து பணியாற்றுபவர்களை எங்களது கோரிக்கையின் அடிப்படையில் நிரந்தரப்படுத்தி சத்துணவு ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்கியது. இதில் பல்வேறு காரணங்களால் பலர் விடுபட்டு இருந்தனர்.

விடுப்பட்டவர்களின் விபரங்களை வட்ட அலுவலகத்திலிருந்து வாரிய உத்திரவுகளின் படி பெறப்பட்டு தலைமைப்பொறியாளர் பணியமைப்பு அலுவலகத்தில் பல மாதங்களாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில் கடந்த 22.12.2016 அன்று பகுதிநேர பணியாளர்களின் கோரிக்கைகளோடு இதர கோரிக்கைகளையும் இணைத்து கூட்டு முறையீடு பெருந்திரள் போராட்டம் நடத்தினோம். அந்த போராட்டத்தையயொட்டி பேச்சுவார்த்தை நடத்திய பொழுது அப்போதைய வாரிய உயர் அதிகாரிகளால் பகுதிநேர ஊழியர்களுக்கு 31.01.2017-க்குள் உத்திரவு வழங்கப்படும் என உறுதி அளித்தத்தின் பேரில் இருதரப்பிலும் கையொப்பம் பெற்று அந்த போராட்டம் முடிவு பெற்றது.

அதன்பின் பல்வேறு கட்டங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில் பல வட்டங்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டு விட்டது. இன்னும் சில வட்டங்களுக்கு விபரங்கள் கோரப்பட்டு அது திரும்ப பெறுவதில் காலதாமதம் ஆகிவிட்டது. தற்போது இந்த பாதிக்கப்பட்ட பகுதிநேர ஊழியர்களுக்கு முழுமையான விவரங்களை பெற்றும் உரிய காலத்தில் நிரந்தரத்திற்கான உத்திரவு நிர்வாகத்தின் காலதாமதத்தால் வழங்க இயலவில்லை.

எனவே, விபரங்கள் இருந்தும் நிர்வாகத்தின் காலதாமதத்தால் பாதிக்கப்பட்ட இந்த ஊழியர்களுக்கு ஏற்கனவே இவர்களின் நிரந்தரம் சம்மந்தமாக உடன்பாடு கண்ட காரணத்தையும் கணக்கில் கொண்டு நிரந்தரம் செய்வதற்கான உத்திரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ். இராஜேந்திரன்)**

பொதுச் செயலாளர்

# 15.02.2021 தொழிற் சங்கங்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்த போது நமது தரப்பில் எழுப்பப்பட்ட கோரிக்கை கடிதம்

நாள்: 15.02.2021

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்

144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா

பொருள் : **மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் - தொழிலாளர் பிரச்சனை குறித்து தீர்வு காண்பது - தொடர்பாக**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் கீழ் கண்ட கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து தீர்வு காணுமாறு எங்களது தொழிற்சங்கத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

1. மின்வாரிய பணியாளர்கள் விபத்தில் இறந்தால் அடக்க செலவு ரூ.25,000-த்தை வழங்க உத்திரவு வழங்கியதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.
2. எங்களது தொழிற்சங்கங்களின் வேண்டுகோளை ஏற்று 2,900/-ம் ஐடிஐ படித்தவர்களை களஉதவியாளர்களாக தேர்வு செய்ய விண்ணப்பங்களை பதிவு செய்ய ஏற்பாடு செய்தமைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.
3. உதவிப்பொறியாளர், கணக்கீட்டாளர், இளநிலை உதவியாளர் பணியிடங்களை நிரப்ப தேர்வு தேதியும் அறிவிக்கப்பட்டுள்ளமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.
4. 22.02.2018 அன்று தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதிய பிரிவு அலுவலகங்கள் , துணை மின் நிலையங்கள், மற்றும் வழங்கப்பட்ட மின் இணைப்புக்கு ஏற்ப பதவிகளை அனுமதித்திட வேண்டும்.
5. மின்வாரிய நிர்வாகத்தால் தொழிலாளர் பணி நிலைகளில் மாற்றம் கொண்டுவர வேண்டுமெனில் 1947 தொழிற்தகராறு சட்டம் 9(A) வின் கீழ் அறிவிக்கை கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்பட வேண்டும்.

   தொழிற் தாவா எழுப்பக்கூடிய விஷயங்களில் தொழிற்சங்கங்களை அழைத்துப்பேசி தீர்வு காணப்பட வேண்டும்.
6. மின்வாரியத்தின் நிதி நிலைமையை காரணம் காட்டி அவுட்சோர்சிங் முறையை ஊக்கப்படுத்தும் வாரிய நிர்வாகம் நிதிநிலையை சீர்செய்ய தொழிற்சங்கங்களின் அனுபவத்தை பெற்றிட தொழிற்சங்கங்களுடன் உரிய ஆலோசனைப்பெற வேண்டும். தொழிற்சங்கங்கள் பங்கு பெறும் வகையில் ஒரு குழு அமைக்க வேண்டுகிறோம்.
7. தமிழக மின்வாரியத்தில் மறுசீரமைப்பு தொடர்பாக பணியாளர்கள் நலன் சார்ந்த தமிழக அரசின் உத்தரவாதத்தோடு, ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்கள் பாதுகாக்கும் வகையில் தொழிற்சங்கங்களோடு தொடந்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும்.
8. சம்பளம் வழங்கும் சட்டத்தின் அடிப்படையில் தொழிற்சங்க உறுப்பினர்களிடம் சந்தா மற்றும் நன்கொடை அவர்களின் சம்பளத்தில் வாரியம் பிடித்தம் செய்து வழங்கும் 13 ஆண்டு நடைமுறையை ரத்து செய்த உத்தரவை திரும்ப பெற்று தற்போது இருக்கும் நடைமுறையை மீண்டும் செயல்படுத்திட வேண்டும் என கோரியிருந்தோம். ஆனால் உறுப்பினர் சந்தா மட்டும் பிடித்தம் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நன்கொடையும் பிடித்தம் செய்ய உத்திரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(I) மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை வாரிய ஆணை 9 நாள் 09.01.2008 படி அடையாளங்கண்டு 22.02.2018 அன்று ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ளவாறு தினக்கூலி ரூ.380/-ஐ மின்வாரியம் நேரடியாக வழங்கிட வேண்டும்.

(II) கேங்மேன் பதவிக்கு தேர்ச்சி பெற்றவர்களுக்கு வாரிய நிர்வாகமும், தமிழக அரசும் அறிவித்தது போல 10000 பேருக்கான பணி நியமன உத்தரவை உடனடியாக வழங்கிட வேண்டும்.

10. பகுதிநேர பணியாளர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கக்கோரி நாங்கள் நடத்திய இயக்கத்தின் காரணமாக கடந்த 22.12.2016-ல் வாரிய உயர் அலுவலர்களால் அடையாளம் காணப்பட்டவர்களுக்கு நிரந்தரப்படுத்துவதற்கான உத்திரவு வழங்கப்படும் என எழுத்து பூர்வமாக உறுதியளித்தனர். மீண்டும் தொடர்ச்சியாக பல்வேறு காரணங்களால் கால தாமதம் செய்து வந்த நிலையில் நாங்கள் வற்புறுத்தியதை அடுத்து 18 மின் வட்டங்களுக்கு 516 பேர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டது. மீதமுள்ள வட்டங்களில் உள்ள 1100 பேர்களுக்கு இன்னும் உத்தரவு வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே விரைந்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

11. மின்வாரிய ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கான கமிட்டி வாரிய ஆணை 224 நாள் 07.10.2019 உத்தரவின் மூலம் அமைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை உடனடியாக துவங்கிட வேண்டும்.

12. கொரானா தொற்று நோய்க்கு பாதிக்கப்பட்டு இறந்து போன மின்வாரிய ஊழியர்களின் குடும்பத்திற்கு அரசு உத்திரவின்படி முன் களப்பணியாளர்கள் என்ற முறையில் ரூ.25 லட்சம் வழங்கிட வேண்டும்.

13. கொரானா காலத்தில் மத்திய, மாநில அரசுகளால் முழுஅடைப்பு அறிவிக்கப்பட்டு பொதுப்போக்குவரத்து வசதியின்றியும், நிர்வாகத்தால் போக்குவரத்து வசதிகளை செய்திடாத சூழலில், பணிக்கு வரமுடியாத ஊழியர்களுக்கு அரசு ஆணை 304-ன்படி சிறப்பு விடுப்பு அளித்து உத்திரவு பிறப்பித்திட வேண்டும். மேலும் ஊனமுற்றோர்க்கான சிறப்பு விடுப்பு 01.08.2020 முதல் 31.08.2020 வரை நீட்டிக்கப்பட வேண்டும் என கோரியிருந்தோம். ஆனால் ஒரு பகுதியாக நடைமுறைப்படுத்தி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

14. பட்டயம் அல்லாத (Non Diplomo) இளமின் பொறியாளர்களுக்கு 2-ம் நிலையிலிருந்து இளமின் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் உடனடியாக வழங்கிட வேண்டும்.

15. உதவிப்பொறியாளர் (மின்னியல்) பதவியிலிருந்து உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கிட வேண்டும்.

16. செயலகப் பிரிவில் ரத்து செய்யப்பட்ட 66 பதவிகளையும் அதே போல நிர்வாகப்பிரிவில் ரத்து செய்யப்பட்ட 51 பதவிகளையும் திரும்ப அளிக்க வேண்டும். முதுநிலை பணித்தொகுதி அலுவலர் பதவியை நிரப்பிட வேண்டும்.

17. வாரிய ஆணை 1 நாள் 06.01.2021 மூலம் மேற்பார்வை பொறியாளர்களுக்கு அவுட்சோர்சிங் மூலம் பணிகளை செய்ய வெளியிடப்பட்ட உத்தரவை ரத்து செய்திட வேண்டும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் மேற்கண்ட கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து தீர்வு காண்பதோடு தொழிற் உறவை மேம்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ். இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்



# கடன் வலையில் தமிழக மின்வாரியம்!

இந்தியாவில் புதிய பொருளாதார கொள்கை 1991-ல் அமலாக்க முற்பட்ட காலத்திலிருந்து தேசத்தின் பொதுத்துறைகளை தனியார் மயப்படுத்தவும், தனியாரை போட்டியாளர்களாக பொதுத்துறைகளில் அனுமதிக்கவும் முடிவு எடுத்து மத்திய ஆட்சியாளர்கள் கூவி விற்க அல்லது பங்கை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

தமிழக மின்வாரியம் ஒரு சேவைத்துறை என்பதை மறந்து, இதை லாப நோக்கத்தோடு வணிக ரீதியாக இயக்க வேண்டும் என்பதே ஆட்சியாளர்களின் கனவு.

1957-ல் மின்சார இலாகாவிலிருந்து மின்சார வாரியமாக உருவாகி இன்றைக்கு உயர்ந்து வளர்ந்து வந்த இந்த சேவைத்துறையை தனியார் மயப்படுத்த, போட்டி சந்தையை உருவாக்க மத்திய ஆட்சியாளர்களில் நிர்பந்திக்கப்பட்டு, அதற்கு தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்தும் ஆனால் அதே நேரத்தில் கொள்ளைப்புற வழியாக அதை அனுமதிக்க வைக்கிறது.

தமிழக மின்சார வாரியம் தனது உற்பத்தியை நிறுத்தி தனியாரிடம் நீண்டகால கொள்முதல் செய்ய திட்டமிட்டதின் விளைவுகளே நஷ்டத்திற்கு காரணம்.

அதிகரிக்கவே செய்யும். நிலக்கரி யார்டு, (Coal yard) முழுவதும் கிரிக்கெட் மைதானமாக தெர்மல் நிலையங்களில் காட்சி அளிக்கிறது.

இந்திய நிலக்கரி உபயோகப்படுத்தி உற்பத்தி செய்யும் மெசினரிகளை கணக்கில் கொள்ளாமல் அதிக விலைக்கு நிலக்கரியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது ஊழலுக்கு மட்டுமே வழி வகுக்கிறது.

உள்நாட்டு நிலக்கரியின் எரிநிலை சக்தி 4200 கலோரி, வெளிநாட்டு நிலக்கரியின் எரிநிலை சக்தி 4700 கலோரி மட்டுமே வெளிநாட்டு நிலக்கரியை இறக்குமதி செய்வதை தவிர்த்தால், அந்நிய செலவாணி நமக்கு மிஞ்சும் கடந்த ஆறுமாதங்களில் உலகளாவிய அளவில் நிலக்கரி விலை 80 சதவீதம் உயர்ந்துள்ளது. ஆனால் அதானி வகையாறக்கள் வாழ்வது எப்படி? அதானிக்கு துறைமுகமே கொடுத்து அழகு பார்ப்பவர்கள் அல்லவா! ஆட்சி புரிகிறார்கள்.

பழைய அனல் மின் உற்பத்தி நிலையங்களை நவீன படுத்தி அதற்கேற்ற தன்மையில் உற்பத்தி செய்தாலே கடன் சுமையிலிருந்து தப்ப முடியும். ஆனால் மத்திய அரசோ சுற்றுச்சுழலை காரணம் காட்டி மின்வாரியத்தின் அனல் மின் நிலையங்களை

**மின்வாரியத்தின் நிதி நிலை ( கோடிகளில்)**

| | | 2018 | 2019(மார்ச்-31) |
|---|---|---|---|
| நிகர இழப்பு (Net losses) | - | 7,761 | 12,623 |
| இயக்க செலவு (Operating losses) | - | 2,744 | 607 |
| ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு | - | 1390 | 1239 |

மார்ச் 2019 இறுதியில் தமிழக மின்வாரியத்தின் கடன், ரூ.1,13,438 கோடியாகும். இது அனைத்து மாநிலங்களின் மொத்த டிஸ்காம் கம்பெனிகளின் கடன்களில் 23.7 சதவீதமாகும்.

நமது அனல் மின் நிலையங்களில் உற்பத்தியை நிறுத்தி விட்டு, எப்பொழுதாவது யூனிட்டை இயக்கினால் உற்பத்தி செலவு

மூடச்சொல்கிறது. அந்த இடத்தை 1சதுர அடி 1 பைசாவிற்கு பிற பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் எனக் கூறியுள்ளது. இங்கு தான் பிரச்சனை எழுகிறது. நமது உற்பத்தி நிலையங்களை மூடி அந்த இடத்தை அதானி பவர் கார்ப்பரேசனுக்கு கொடுக்க, திட்டமோ என்னவோ?

மரபுசாரா எரிசக்திக்கு முக்கியத்துவம்

அளித்து தமிழகத்தில் புனல், காற்று,சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டமிட வேண்டும்.

மின் உற்பத்தியை பெருக்காமல், பெரும் முதலாளிகளிடமிருந்து மின்சாரத்தை பெற்று விநியோகித்து வரும் தமிழக மின்சார வாரியத்தை, மின் மிகை மாநிலமாக மாற்றியுள்ளோம் என ஆட்சியாளர்கள் கூறுவது, வடிகட்டிய பொய் அல்லவா?

இவைகளை சீர் செய்வதற்கு பதிலாக 3.19 கோடி மின்நுகர்வோர்களுக்கு சேவை செய்ய நிரந்தர பணியாளர்களை அனுமதிக்காமல் அவுட்சோர்சிங் விட்டு, நிரந்தர ஊழியர்களின் பதவி உயர்வையும், காலியிடங்களில் வேலை வாய்ப்பு வழங்கி இளைஞர்களை பணிக்கு அமர்த்தாமல் இருந்த தாலும் வாரியம் லாபத்தில் செல்லும் என்ற தப்பு கணக்கை போட்டு வருகிறார்கள்.

ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கத்தினரும் தாங்கள் செய்யும் தவறுகளை மறந்து, ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதினால் தான் அதிக கடன்சுமை ஏற்படுகிறது என கூறிவருவது நியாயமல்ல. உண்மையிலே மொத்த வருவாயில் ஊழியர்களுக்கு பென்சன் மற்றும் சம்பளம் வெறும் 16 சதவீதம் மட்டுமே!

தமிழகம் மின்வாரியம் கடன் சுமையிலிருந்து தப்பிக்க ஆதரிப்போம்! இடதுசாரி ஆதரவு பெற்ற வேட்பாளர்களை.

**கள்ளக்குறிச்சி மின்திட்டத்தில் மத்தி அமைப்பின் 50 ஆம் ஆண்டு பொன்விழா கொடியேற்றி கல்வெட்டு திறப்பு விழா**



## Form IV
## (See Rule 8)

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 27, Mosque Street, Chepauk, Chennai 600 005. |
| Periodicity of Publication | : | Monthly |
| Printers Name | : | **N. Srinivasan** |
| Nationality | : | Indian |
| Address | : | **Vaigai Printers and Publishers** 2/38, Potters Street, East Jones Road, Saidapet, Chennai 600 015. |
| Publisher's Name | : | **S.S. Subramanian** |
| Nationality | : | Indian |
| Address | : | 27, Mosque Street, Chepauk, Chennai 600 005. |
| Editor's Name | : | **S.S. Subramanian** |
| Nationality | : | Indian |
| Address | : | 27, Mosque Street, Chepauk, Chennai 600 005. |

Name and address of individuals who own the newspaper and partners of share-holders more than one percent of the total capital of Central Organisation of Tamil Nadu Electricity Employees. I N. Srinivasan, hereby declare that the particulars given above are tru to the best of my knowledge and belief.

Dated 1st March 2021

## மாநிலம் முழுவதும் கேங்மேன் பயிற்சி வகுப்பு நடத்தி
## 10 ஆயிரம் கேங்மேன்கள் பணி நியமனத்திற்காக தடைகளை தளர்த்தி
## பணி நியமனம் பெற்று பணியேற்புக்கு வழிகாட்டிய
## சிஐடியு-வில் தங்களை இணைத்துக் கொண்ட கேங்மேன் ஊழியர்கள்



Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 15.03.2021

**மத்திய அமைப்பின் அறைகூவல்..!**
**மதசார்பற்ற, பொதுத்துறையை பேணிகாக்கும்**
**இடதுசாரி கட்சிகளின் வழிகாட்டுதலுடன்**
**திமுக தலைமையிலான அணியினை**
**தேர்தல் 2021 - ல் வெற்றி பெற செய்வோம்!**



**வாக்களிக்க வேண்டிய வெற்றி சின்னங்கள்**



Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian